பக்கங்கள் 12 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 12 (25.3.94) வெள்ளிக்கிழமை ஓசை 35

பொது சன நூலகம் மாநகராட்சி 25-3-1994 யாழ்ப்பாணம்

## மயிலந்தனை படுகொலை மேல் நீதிமன்றத்திடம்

மட்டக்களப்பு மயிலந்தனைப் படுகொலை வழக்கு மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. முப்பத்திமூன்று கிராம வாசிகளைக் கொலை செய்ததாகவும் மற்றும் பன்னிரெண்டு பேரைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் 24 இராணுவத்தினர் மீது கடந்த ஒருவருட காலமாக வழக்கு விசாரணை நடைபெற்றது. குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் மூவர் பின்னர் விடுவிக்கப்பட்டனர், தற்போது 21 சிப்பாய்கள் (11ஆம் பக்கம் பார்க்க)

# தென்மாகாணசபைத் தேர்தல் எதிர்தரப்பினர் அமோக வெற்றி

## இரவுநேர ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

**தென் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலானஎதிர்க்கட்சிக் கூட்டணியினர் அமோக வெற்றி பெற்றுள்ளனர்**

**இதேவேளை தென்மாகாணத்தில் வன்முறைகள் நிகழலாம் என இரவுநேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.**

நேற்று நடைபெற்ற தேர்தல் முடிவுகள் நள்ளிரவின் பின் வெளிவரத் தொடங்கின முதலில் வெளியான தபால் மூலம் வாக்களிப்பிலும், தொகுதிவாரித் தேர்தல் முடிவிலும் பொது ஜன ஐக்கிய முன்னணி அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளது.

இதே சமயம் தென்மாகாணத்தில் இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதுடன் பெரும் வன்முறைகள் வெடிக்கலாம் என கருதப்படுவதைத் தொடர்ந்தே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் இரவு 11 மணியில் இருந்து அதிகாலை ஐந்து மணிவரையிலும் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

## தேர்தலில் முறைகேடு நடந்ததாக எதிரணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

திஸமஹாரகம தேர்தல் தொகுதியில் இருந்த புளுங்கம வாக்குச்சாவடியில் வாக்களிக்கசென்ற மக்களை குண்டர் படையொன்று தாக்கி விரட்டியடித்தபின் தாமே அவர்களது வாக்குச் சீட்டுகளில் வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ தே. கவைச் சேர்ந்த குண்டர்களே இவ்வாறு முறைகேடாக நடந்து கொண்டதாகவும் இச் சம்பவம் நேற்றுநண்பகல் அளவில் நடைபெற்றதாகவும், இதனை அடுத்து வாக்களிக்கச் செல்ல மக்கள் அஞ்சினர் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தங்காலை பெலியத்த, முல்கிரிகல தொகுதிகளில் ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் மட்டுமே தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் ஐ. தே. கட்சிக்கு சாதகமாக நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் உயர்பதவி பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டாரராம் இவர் ஐ. தே. கட்சிக்கு ஆதரவாகவே தேர்தல் கடமையின் போது செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலி மாவட்டத்தில் தேர்தல் வாக்குகள் எண்ணப்படும் நிலையத்தில் உள்ளதைப் போன்ற வாக்குப் பெட்டிகள் முதல் நாள் இரவே எடுத்து வரப்பட்டு தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள அமைச்சர் ரூபா கருணதிலக என்பவருடைய வீட்டில் இறக்கப்பட்டதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் முதல் அமைச்சர் பதவிக்கு போட்டியிடும் அமரசிறி தொடங்கொட கூறினார்.

நேற்று முன் இரவு காலி மாவட்டத்தைச் சேர்ந்த ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் அரச ஆதரவுச் சுவரொட்டிகளை ஒட்டியதாகவும்இதற்கு மக்கள் தார் பூசியதாகவும் இவர்களது இச் செயற்பாடுகள் தேர்தல் நடைமுறைக்கு புறம்பானவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாந்தோட்டையில்

## பத்திரிகையாளர் மீது குண்டர்கள் தாக்குதல்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தல் நடைபெறும் சம்பவங்களை நேரில் பார்வையிடச் சென்ற இரு பத்திரிகையாளர்கள் இனம் தெரியாத குண்டர்களினால் தாக்கப்பட்டுள்ளனர் என பி.பி.ஸி. சிங்கள சேவை செய்தியாளர் எல். மோ. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ராவய, திவயின பத்திரிகையாளர்களே மேற்படி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திரிச்சவெல கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகே தாக்கப்பட்டார்கள்என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாகோ வந்தது

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'மாகோ' கப்பல் யாழ் அரச அதிபரின் பெயரில் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு 4 ஆயிரத்து 620 பரல் மண்ணெண்ணெயுடனும் தனியார் மூவருக்கு 700 பரல் தேங்காய் எண்ணெயுடனும் வந்துள்ளது.

பருத்தித்துறைக்கு நேற்று பகல் 10, 30 மணியளவில் வந்த இக்கப்பலில் மேலும் யாழ் போதனா வைத்தியசாலை, பல்கலைக்கழகம், யாழ் மாநகரசபை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோருக்கும் எரிபொருள்கள் எடுத்து வந்துள்ளது. (யோ

திருநெல்வேலி இளைஞர்

## ஜேர்மனியில் குளத்தில் சடலமாக மீட்பு

(நமது நிருபர்)

திருநெல்வேலி தாளையடியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் ஜேர்மனியில் குளம் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாகமுத்து சற்குணபாலா (சற்குணம்)(வயது 27) என்ற இந்த இளைஞரே மேற்படி மர்மமான முறையில் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்நபர் ஜேர்மனிக்குச் சென்று சுமார் பத்து வருடங்கள் எனவும், அண்மையில் இவர் 18 நாட்கள் அவரது அறையில் இருந்துகாணாமல் போயிருந்தார் எனவும் இதனை அடுத்து இந்நபரின் சடலம் ஜேர்மனியில் உள்ளகுளம்ஒன்றில் மிதந்தது கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக திருநெல்வேலியில் உள்ள இந்நபரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது பற்றி இந் நபரின் உறவினர்கள் தெரிவிக்கையில் இதுகொலையாகஇருக்கலாம் என சந்தேகிப்பதாக தெரிவித்தனர். (பா)

## தேர்தல் முடிவுகள்

மாவட்டம்: மாத்தறை:

| தொகுதி; | பொ: ஐ: மு: | ஐ. தே. க. | ந: ச: சு: |
|---|---|---|---|
| தெனிநுவர | 25, 112 | 18, 631 | 173 |
| கம்புறுபிட்டிய | 26, 934 | 18, 217 | 225 |
| வெலிகம | 29, 932 | 20, 955 | 182 |
| மாத்தறை | 28, 431 | 19, 169 | 369 |
| அக்மீன | 26, 496 | 20, 997 | 187 |
| தெனியாய | 24, 883 | 24, 675 | 237 |
| அக்குறஸ்ச | 28, 095 | 22, 926 | 197 |

மாவட்டம்: காலி:

| தொகுதி: | பொ: ஐ: மு: | ஐ: தே: க. | ந: ச, சு: |
|---|---|---|---|
| காலி | 22, 004 | 18, 219 | 308 |
| ஹபராதுவ | 25, 076 | 19, 042 | 284 |
| கரந்தெனிய | 19, 417 | 16, 071 | 290 |
| அக்மீன | 24, 888 | 19, 748 | 333 |
| பலபிட்டிய | 13, 396 | 14, 734 | 887 |
| ரத்கம | 22, 204 | 19, 913 | 2,669 |
| அம்பலாங்கொட | 21, 577 | 15, 886 | 996 |
| கிமிதும | 29, 516 | 27, 769 | 332 |
| பத்தேகம | 29,706 | 23, 980 | 1201 |
| பெலியத்த எம்பிட்டிய | 27, 064 | 24, 077 | 248 |

மாவட்டம்; அம்பாந்தோட்டை:

| தொகுதி; | பொ: ஐ. மு: | ஐ. தே: க. | ந: சு: ச. |
|---|---|---|---|
| முல்கிரிகல | 24, 783 | 21, 141 | 802 |
| பெலியத்த | 23, 540 | 19, 436 | 956 |
| திஸ்ஸமஹாராம | 39, 912 | 28, 573 | 401 |
| தங்காலை | 28, 731 | 25, 653 | 511 |

## தென்மாகாணசபை தேர்தல் கட்சிக்குரிய ஆசனங்கள்

| | | |
|---|---|---|
| அம்பாந்தோட்டை | மொத்த ஆசனம் | 14 |
| | பொ. ஐ. மு: | 08 |
| | ஐ: தே. க. | 06 |
| மாத்தறை | மொத்த ஆசனம் | 17 |
| | பொ. ஐ. மு. | 10 |
| | ஐ: தே. க. | 07 |
| காலி | மொத்த ஆசனம் | 22 |
| | பொ: ஐ. மு. | 12 |
| | ஐ. தே. க. | 10 |

# வரி விளம்பரம்

## புரோயிலர் குஞ்சு விற்பனை

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் 26-3-94 சனிக்கிழமை காலையில் விநியோகிக்கப்படும். ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்; தேவையானோர் முன் கூட்டியே வந்து பதிவு செய்து கொள்ளவும். "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7839)

## சுவாமியம்மாவின் 71வது ஜயந்தி விழா

கீரிமலை சுவாமியம்மாவின் 71வதுஜயந்திவிழா (26-3-94) சனிக்கிழமை காலை 9-30 மணியளவில், சங்கானை இலுப்பைத்தான் முருகமூர்த்தி ஆலயத்தில், சைவப்புலவர், வித்துவான் திரு: வ. செல்லையா தலைமையில் நடைபெறும். (7832)

## "நீர் கொள்கலன்"

வெட்டிச் செப்பனிட்டு வர்ணம் தீட்டிய பாதி பரல் விற்பனைக்குண்டு. 'மிக்கவைற்' (கி-8899)

## ஆங்கில மருத்துவம்

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால்தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது, பகவான் ஆங்கில மருத்துவ அகம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-8879)

## தவறிவிட்டது

மா. செல்வநாயகம் ஆகிய எனது நகைகளடங்கிய பார்சல் ஒன்று (மோதிரங்கள் 18, நெளியல் காப்பு 2) 23-3-94ல் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: துரையப்பா பத்தர், கோபாலசாமி நகைக்கடை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்; சன்மானம் உண்டு. (7336)

## றெனி மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி உடன் வழங்கப்படும்; இல. 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்: (7844)

## பசன் கன்றுகள் விற்பனைக்கு

ரூபா10/- மட்டுமே. சொறிபலவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE/INDUSTRIES (PVT) LTD, No. 14, Seenier Lane, Jaffna. (கி-8816)

## நவீன மருத்துவம்

வாத வியாதி, ஆஸ்துமா, தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, மூலரோகம், நாள்பட்ட காய்ச்சல், இருதய வியாதிகள், சிறுவர் பெரியவர்க்குரிய சகல நோய்கட்கும் நவீன எலட்ரோனிக் பரிசோதனைகளும், சிகிச்சையும் இரெத்ணம் வைத்தியசாலை, 129 ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம்: (7838)

# உ
இமையம்

# திருமண அழைப்பிதழ்

மணமக்கள்:

திருநிறை செல்வன்
**பரராசசிங்கம் கணேசலிங்கம்**
(விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

திருநிறை செல்வி
**சபாரத்தினம் வசந்தி**
(சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆசிரியை, வட-இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிக்கிளை, சிறுப்பிட்டி, நீர்வேலி.)

காலம்: 27-03-1994 ஞாயிற்றுக்கிழமை பகல் 11-11 முதல் 12-40 வரையிலான மிதுனலக்கின சுபவேளை.

இடம்:: அரசகேசரிப் பிள்ளையார் கோயில், நீர்வேலி.
அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வருக!
இருபெரும் குரவர் தம் இன்முக அழைப்பு இது

7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

"இரத்தின வாசம்"
இராசவீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(7829)

## குழந்தைகள் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனைக்குட்பட்ட மருத்துவ மனைகளுக்கு ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் வந்துள்ளன,

வானூர்தி மூலம் எடுத்துவரப்பட்ட இத்தடுப்பூசி மருந்துகள் மந்திகை, சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் ஏனைய மருத்துவ மனைகளுக்கும் உடனடியாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (கி)

# யாழ். இந்து

பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

# முழுநிலா நாட்கருத்தரங்கு

காலம்: 26-03-1994 சனிக்கிழமை மாலை 3-30 மணி
இடம்: குமாரசாமி மண்டபம்
கருத்துரை வழங்குபவர்: புதிய உலக ஒழுங்கினைப் புரிந்து கொள்ளல்
திரு. வே. பாலகுமாரன்
தமிழீழ கல்விக்கழகம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.

அன்பளிப்பு:
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(கி-8901)

# அறிவித்தல்

## வேலணை ப.நோ.கூ. சங்கம்

துவிச்சக்கர வண்டி தேவைப்படும் வேலணை ப.நோ.கூ. சங்க அங்கத்தவர்கள் யாழ்ப்பாணம் கோணாந்தோட்ட வீதியில் அமைந்துள்ள அதன்தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கி-8911)


## மூன்று வயோதிபர் விடுதலை

(வடமராட்சி)

மாதகல் பகுதியில் இராணுவ சுற்றிவளைப்பில் சிக்கி ஒன்றரை வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் மூன்று வயோதிபர்கள் விடுவிக்கப்பட்டு நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்.

நோயாளிகளான ஆறுமுகம் இவானந்தம், இரத்தினம் பாலாம்பிகை, அன்னமுத்து நடராசா ஆகியோரே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவரின் அனுசரணையுடன் கூட்டி வரப்பட்டனர். (யோ)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09-05-1966

மறைவு; 04-04-1993

திருமதி
## ஸ்ரீஸ்டெலாதேவி - (இராசாத்தி)

திதி:- 25-03-1994

உன் முகம் காணாமல்
ஆண்டொன்று சென்றதம்மா...
காலமெல்லாம் எம்மோடு வாழ்வாய் என்றிருந்தோம்
உன்னை இறைவன் தனக்காக்கிக் கொண்டான்
நீ எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் இதயங்களிலிருந்து நீ பிரியவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் உனதன்பின்

தகவல்:-
செ. பாஸ்கரன் (மச்சான்)
418, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்;

அப்பா, அம்மா, கணவன்,
பிள்ளைகள் சுஜிந்தன், ரஜித்
சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்;

(7881)


# COMPUTER கல்வி

**Basic Language**
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 26-03-94
மணி 10-30

**LOTUS 1-2-3**
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 26-03-94
மணி 10-30

உறுதியான கல்வியைப் பெற

*School Of Business Administration*

16, 3rd Cross Street,
JAFFNA.
(கி-8906)


# நினைவு கூருகின்றோம்...

## 1994-03-25

1984-ம் ஆண்டு இத்தினத்தில் பருத்தித்துறை சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொலைப்பட்ட விநாயகமுதலியார் வீதியைச் சேர்ந்த தமிழ் மாணவன்; கல்லூரி வீதியைச்சேர்ந்த தமிழ்ப் பெண்;

1987-ம் ஆண்டு அரியாலையில் காவற்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அரவாத்** (பாபு ஜோன் பாலேந்திரா - 17, அரியாலை கிழக்கு- யாழ்)

1988-ம் ஆண்டு மட்டு - தேசவிரோத சக்திகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். அரசன்** (ராம்குமார் - தாமரைக்கேணி - மட்டு)

1989-ம் ஆண்டு ஆனைக்கோட்டைப் பள்ளத்தடிப்பில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ராஜு** (கந்தையா முகுந்தன் - முகுந்தன்வீதி, மானிப்பாய் - யாழ்)

**2-ம்லெப். காந்தி** (இரட்ணசபாபதி புஸ்பகாந்தன் - ஆனைக்கோட்டை, மானிப்பாய் - யாழ்)

1991-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கிரஞ்சீவி** (முத்தையா மனோகரன் - உடப்பு - புத்தளம்)

1992-ம் ஆண்டு மட்டு - முதிரையடியேற்றம் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சேரன்** (குணரத்தினம் தேவேந்திரராசா - மகிழூர், களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதே தாக்குதலின்போது தப்பியோடிய இராணுவத்தினர் செங்கலப் பாடசாலையினுள் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டதில் கொல்லப்பட்ட மாணவன்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

# தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு தமிழ்க் குழுக்கள் இழைத்த பெரும் துரோகம்

அண்மையில் ''ஏதோ ஒரு வழியாக'' சிங்கள இராணுவத்தால் தமிழீழத்தின் சில பகுதிகளில் ஒப்பேற்றி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தேர்தல் எனப்படும் இன்னொரு 'பேரினவாதத்தின் வெளிப்பாடு' பற்றி தமிழீழ மக்கள் என்ன கருத்தினைக் கொள்ள முடியும்? தமிழீழ மக்களின் விருப்பிற்கு மாறாக அவர்களது அடிப்படை சனநாயக உரிமைகளையே கேலிக்கூத்தாக்கிய இத்தேர்தலை நடாத்தியோரும் பங்குபற்றியோரும் வரலாற்றின் பக்கமொன்றை கறைப்படுத்தியதை தவிர வேறு எதனை அடையப் போகின்றார்கள்? பதவியில் இருக்கும்போது தாம் நடாத்திய எத்தனை தேர்தல்களில் சருவதேசத்தின் பலநாடுகளில் சருவாதிக்க மோசமான அடக்கு முறையாலும் மோசடிகள் மூலம் தம்பதவிகளை உறுதிப்படுத்தியதும் பின் அவர்கள் மக்களால் தூக்கி வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டதொன்றும் நாம் அறியாத சங்கதியல்லவே.

இத்தகையநிலையிலேஇந்நடவடிக்கையில் பங்குபற்றியோரும் பங்குபற்றமுடியாதோரும், இப்போது கூறும்கருத்துக்கள்எவ்வளவு குழப்பகரமானதாகவுள்ளது என்பதையும், நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 'கழிவு வாய்க்காலை சுத்தப்படுத்தவும், கட்டாக்காலி நாய்களை துரத்திப் பிடிக்கவுமே அதிகாரமுள்ள இம்மன்றங்கட்கு தேர்தலும் ஒரு கேடா?'' என தொடக்கத்திலேயே ஒரு தமிழ்க்குழு கூறிவிட்டது. இவர்கட்கு ஏனைய குழுக்களைவிட சற்று அறிவு கூட என நாம் அடித்துச் சொல்ல முடியும் ஏனென்றால் இத்தேர்தலில் பங்குபற்ற எந்த தருக்க ரீதியான நியாயத்தையும் முன்வைக்க முடியாது என்பதோடு இத்தேர்தல்நாடகம் அரங்கேறினால் அடுத்த நாடகம் வட-கிழக்கு பிரிப்புக்கான தேர்தல் நாடகமாக அமையும் என்பதும் அது தமது இந்தியச் சார்பு நிலைக்கு பெரும் குந்தகத்தை மட்டுமன்றி 1987-ம் ஆண்டு உடன்பாட்டை முற்றாக முடிவுக்கு கொண்டுவந்து விடும் என்பதாவது இவர்கட்கு புரிந்திருந்தது. இந்தளவு ''அரசியல் ஞானம்'' இல்லாத ஏனையோர் பற்றிநாம்என்னகூறுவதற்கு இருக்கின்றது. பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய பனிக்கட்டி மலைகள் கடலில் மிதக்கும்போது அவற்றின் சிறிய மேற்பகுதியே வெளியில் தெரியுமாம் அதுபோலவே இக் குழுக்களின் அரசியல் நிலைப்பாடு உண்மையான அபாயத்தை அறியாத குருட்டு அரசியல் வாய்ப்பாடாகி விட்டது.

இப்போது இவர்கள் என்ன கூறுகின்றார்கள்? 'முசுலிம்மக்களின்தொண்டமான்'எனஇப்போது வருணிக்கப்படும் பதவி விலகல் புகழ் அஷ்ரப் கூறுகிறார் ''சனநாயகத்தை காப்பாற்ற ஐ. தே. கட்சியினதும் அதன் கூட்டாளிகளான தமிழ்க் கட்சிகளினதும் பெரும் ஆபத்துக்கு மத்தியிலும், ஒரு பெரும் பயங்கரக்களமாக தோன்றிய இத்தேர்தலில் பெரும் மோசடிகட்கு மத்தியிலும் பங்குபற்றினோம்'' என்கிறார். என்ன கூற வருகிறார் இவர்? இவர் இதே கூற்றினை இந்திய இராணுவம் மாகாணசபை தேர்தலை நடாத்தியபோதும் கூறினார் என்பது இங்கே தொடர்புபடுத்த வேண்டிய செய்தி. (அவரது இப்போதைய பதவி விலகல் நாடகமென்பது விரைவில் வரப்போகும் தேர்தல்களில் தமக்குச் சார்பான அனுதாப அலையை வீசச்செய்து மீண்டும் பதவிக்கு வருவதே என்பது பிறருக்கு புரியாது என்று அவர் நினைக்கிறார் போலும்)

எதிர்பார்த்தது போலவே ஐ.தே.கட்சி பெருத்த ஆரவாரம் செய்கின்றது 1950-60 களில் அரசியல் நிலைப்பாட்டிலேயே தேங்கிப்போய் வளர்ச்சி காணாத டி.பி.விஜயதுங்கா சனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி, இணைப்பிற்கு கிடைத்த தோல்வி, இருப்பது இனப்பிரச்சினை அல்ல என்பதற்கான அத்தாட்சியென ஆர்ப்பரிக்கின்றார். ஆனால் ஏனைய தமிழ்க்குழுக்களோ தேர்தல் முடிவுகள் குறிப்பது சனாதிபதிக்கு கிடைத்த பெரிய தோல்வி என்றும் இருப்பது இனப்பிரச்சனையேஎன்பதற்கான சான்று என்று அடிக்குரலில் கூறி வருகின்றனர். இவற்றில் எது உண்மை என்கிற ஆய்வில் நாம் ஈடுபடத்தேவையில்லை. ஏனென்றால் பேரினவாத சிங்கள அரசையும் அதன் ஏவல்நாயான சிங்கள இராணுவத்தையும்சார்ந்து நிற்கும் இவர்கள் தமிழீழ மக்கட்குமுன் அரசுவேறு, இராணுவம் வேறு, புலிகள் வேறு இனப்பிரச்சனை வேறு, அரசியல்தீர்வுவேறு, இராணுவத் தீர்வுவேறுஎனசெப்பிடுவித்தைகாட்டுகின்றனர். முன்னர்கொழும்பிலே கொஞ்சிக் குலாவிவிட்டு தேர்தல் வரும்போது தமிழீழ மண்ணிலே வந்து 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என முழக்கமிட்டு எம்மக்களை அரசியல் படுகுழிக்குள் தள்ளிவிட்டவர்களின் அடுத்த வாரிசாக இவர்கள் தோற்றம்பெறுவது ஒரு அபத்தமான முரண்பாட்டினையும் குறிக்கும் பெருத்த அவலமாகும்.

இத்தேர்தலில் பங்குபற்றியதன்மூலம் பெரும்வரலாற்று குருடராக தமிழினத்தின் அடிப்படை உரிமைகட்கே பெரும் துரோகம செய்தவராக தாம் மாறிவிட்டதைக்கூட இவர்கள் அறிவார்களா என்பதே கேள்விதான், ஏனென்றால் கடந்த கால தமிழ் அரசியல்வாதிகளால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட உத்தியாகி பின் அவ்வுத்தியை கடைப்பிடித்தோரின் அரசியல்வாழ்வையே அத்தமிக்கச் செய்து இப்போது தமிழீழ தேசியப் போராட்டத்தின்பட்டறிவாக ஒரு பரிமாணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையொன்றை இவர்கள் இப்போது வசதிக்காக மறந்துவிட்டார்கள். இரு பிரதான சிங்கள கட்சிகளினதும் பதவியாசை என்னும் முரண்பாட்டை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் இவ்வுத்தியானது இன்று செல்லாக்காசாய் போய்விட்டது இந்நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி சிங்களக் கட்சிகளைப் பதவிக்கு வரச்செய்து அதன் நிழலில் குளிர்காய்ந்தவர்கள் பின் அக்கட்சிகளால் தூக்கிவீசப்பட்ட வரலாறு மறக்கக்கூடியதா என்ன?

இப்போது தனிப்பெரும் தலைவராக தனது அரசியல் உத்திகள் பற்றி தானே பெருமைப்பட்டவரான தொண்டாவும் இப்பாதையின் முடிவில் அல்லவா நிற்கிறார்! அவரது அண்மைக்கால சறுக்கல் சமகால வரலாறு அல்லவா? அவரது முன்னாள் நண்பரும் இப்போது 'இந்து' பத்திரிகையில் ''மனந்திறந்து எழுத''த் (Plain Speaking) தொடங்கியிருப்பவருமானடிக்சிற்என்ன சொல்கிறார்? மத்திய தென் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவளி தமிழர்களின் குறிப்பிடக்கூடிய தலைவராக சொல்லக்கூடியதொண்டமானின்பிடி இப்போது தளர்வடைந்து செல்கின்றது. இ.தொ.காவிற்குள் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அதற்குள் பதற்ற நிலைமைகளை உருவாக்குகையில்பழைய தலைவர்களின் மயக்கத்திலிருந்து இப்போது இளைஞர்கள் விடுபட்டுவிட்டனர்.

ஆனால் இப்போது எந்த மயக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்றும், எந்தவறுகளை தாம் செய்யக் கூடாது என்பதற்காக போராட்ட அமைப்புக்களை உருவாக்கினவர்கள் இப்போது வாக்குக் கணக்குப் போடுகிறார்கள். ஒட்டு மொத்தமாக ஐ. தே. கட்சிக்கு எதிராக மூன்று இலட்சம் வாக்குகள் விழுந்ததால் சனாதிபதித் தேர்தலில் டி பி யின் நிலைபற்றிய கேள்வியோடு

**பாலகுமாரன்**

சிலர் ஒருபுறம். மறுபுறத்தில் பல்வேறு குழுக்களை போட்டியிட்ட முன்னைய தமிழ்க் குழுக்கள் பெற்ற ஒன்றரை (1 1/2) இலட்சம் வாக்குகளும் அஷ்ரப்பின் கட்சிபெற்ற 87 ஆயிரம் வாக்குகளும் ஐ. தே. கட்சிக்கு எதிராக விழுந்திருப்பதால் சனாதிபதித் தேர்தலில் டி. பி. வெல்வதானால் தமது ஆதரவை நாடி வர வேண்டும் என்கிற நப்பாசை சிலருக்கு. சிங்களவரோ தமிழரோ தமது வாக்குகள் இன்றி கிழக்கில் எத்தகைய வெற்றியையும் ஈட்ட முடியாது என்று அபாயகரமான அரசியல் விளையாட்டில் அஷ்ரப்பின் முசுலீம் காங்கிரசு மறுபுறம். தமிழர் பலத்தால் இணைப்பிற்கு ஆபத்து என மிரட்டும் இவர், சனாதிபதி பலத்தால் முசுலிம் வாக்குகள் அவருக்கு சேராமல் தடுப்பதற்கு தானே சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று வேறு பயம் காட்டுகிறார். விடுதலை என்னும் வேள்வித் தீயிலே உயிரையே தானம் செய்யும் தமிழீழ மக்களுக்கு இத்தகைய மூன்றாம்தர அரசியல் புளித்துப் போனது ஒன்றல்லவா? இத்தகைய அரசியல் தொடக்கத்தில் பதவிகளையும் பணத்தையும் ஒருசிலர் பெற வழிவகுத்து இறுதியில் முதலுக்கே மோசம் என்றாகி விடுவது என்ன புதிய செய்தியா?

இத்தகைய மூன்றாம்தர அரசியல் குறித்து எம் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாதபோதும், அவர்கள் இதயத்திலே பெரும் வேதனையை தமது முதுகிலே முன்னாள் தமிழ்க் குழுக்கள் குத்தியமை இன்று ஏற்படுத்திவிட்டது. தேர்தலில் பங்கு பற்றியதன் மூலம் தமிழீழ மக்களுக்கு பெரும் துரோகமல்லவா அவர்கள் தாயகக் கோட்பாட்டிற்கு பெரும் கறையை அல்லவா இவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். தென் தமிழீழத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமே தமிழ் தேசியத்தின் உருவாக்கத்திற்கு ஆணி வேரல்லவா? இத்தேர்தலில் பங்கு பற்றியதன் மூலம் சிங்கள பேரினவாதிகளின்மாபெரும் இப்பாதகச் செயலையல்லவா இவர்கள் சட்டரீதியாகஏற்றுக்கொண்டுவிட்டார்கள் பட்டிப்பளை கல்லோயாவாக மாறியது. பார்வதிபுரம் பதவியா ஆனது. குமரேசன் கடவை கோமரங்கடவை ஆகியது, கந்தளாய் பறிபோனது. மணலாறு வெலிஓயா ஆகியது சேருவாவெல அம்பாறை தொகுதிகள் எவ்வாறு தோற்றம் பெற்றது? எல்லாவற்றையும்விட 1900ம் ஆண்டு ஒரு சிலராக இருந்த சிங்களவர், இன்று திருமலையில் ஒரு இலட்சம் தொகையை எவ்வாறு எட்டிப் பிடிக்க முடிந்தது? இவ்வரலாறு தமிழனாக பிறந்த ஒருவனும் மறக்க முடியாத மனனம் செய்யப்படவேண்டிய வரலாறு அல்லவா? இவர்கள் வாழ்ந்த வாழும் மண்ணும் இதுவல்லவா? இப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்து நடாத்தப்படவிருப்பதாகக் கூறப்படும் சனவசன வாக்கெடுப்பில் தமிழர் தாயகத்தில் அத்துமீறிக் குடியேற்றப்பட்ட சிங்களவர் வாக்காளராக மாறி வாக்குப் போடும்போது அம்மண்ணின் மைந்தர்களை பல்லாயிரக் கணக்கில் ஏதிலிகளாக அலையும் நிலையை இவர்கள் எவ்வாறு மறந்தார்கள்? எது நடக்கக்கூடாது என்பதற்காக விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அது நடப்பதற்கு இவர்களே காரணமாக இருப்பது பெரும் வரலாற்று அவலமல்லவா?

ஆனால் இத்தகைய அவல நிலை தோன்றுவதற்கான வித்து இன்று நேற்று இடப்பட்டதல்ல. 1987 ஆண்டுயூலை மாத கடைசிவாரம் ஈழத்தமிழர் வாழ்விலே மறக்க முடியாதகறைபடிந்த கறுப்பு வாரமாகும். இம்முறை தனது அழுத்தங்கட்கு சிங்கள அரசைப் பணிய வைப்பதில் வெற்றி கண்ட இந்திய அரசு தமிழீழ குழுக்கள்மேல் மிகக் கூடிய அழுத்தமொன்றை அரைகுறைத் தீர்வொன்றை ஏற்க பிரயோகிக்கப் போகின்றது என்பது அப்போதைய செய்தியாக இருந்தது. 1987 யூலை 25ம் திகதி தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் சென்னையிலிருந்து டெல்லிக்கு ஏற்றிச் செல்லப்பட்டபோது எந்தவிலை கொடுத்தேனும் அழுத்தங்களை சமாளிக்க வேண்டும் இயக்கப்பிளவுகள் இங்கே முதலிடம் பெறக்கூடாது என்று எல்லாத் தரப்பாலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் புதுதில்லியில் இறங்கி உளவு அதிகாரிகளை சந்தித்த ஒரு இரவின் பின்னே எல்லாமே தலைகீழாகியது. புலிகள் உடன்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றார் என்பது தெரிந்தவுடன் இந்திய அரசின் ஏக ஆதரவுபெற்ற தமிழ்க் குழுக்களாக தாம் வர வாய்ப்பு இருப்பதை அவதானித்து புலிகளை தனிமைப்படுத்தி அழிக்க இதுவே நல் தருணம் என அவர்கள் நினைத்துக் கொண்டனர். இதற்காக தமிழ் ஈழ மக்களின் அரசியல் அபிலாசைகளையே மிதித்து அதை அடகு வைக்க இவர்கள் சற்றேனும் தயங்கவில்லை. அது மட்டுமன்றி இவ்வுடன்பாடு பற்றிய தமது நிலைப்பாடு தமது இராசதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி என்று ஒரு சிலரும், அதை மறுத்து த. வி. கூட்டணியினர் எத்தகைய சிரமத்தின் மத்தியில் இந்த உடன்பாடு உருவாக காரமாக தாம் இருந்தோம் என்பதை நூலாகக் வெளியிட்டது மட்டுமன்றி ''செல்வா நட்டித் தந்த செல்வம்'' என இந்திய உடன்பாட்டினை வருணிக்கவும் தொடங்கினர். இது எவ்வளவு பரிதாபகரமானது. ஏனென்றால் தமிழ் மாநிலத்தில் சுயாட்சி பெற்று தமிழ் மக்கள் ஓர் இணைப்பாட்சி (சமஷ்டி)யில் வாழவேண்டும் என்பதற்காக 1956 முதல் 1977 வரை இருபது ஆண்டுகள் அதற்காகப் போராடிய தந்தை செல்வாவை இல. இந்திய உடன்பாட்டோடு தொடர்பு படுத்தியமை எவ்வளவு வரலாற்று மூடத்தனம் என்பது இப்போது விளங்கிவிட்டது.

எனவே இப்போதாவது இறுதி நேரத்திலாவது சிங்கள பேரினவாதிகளின் உருட்டுக் காய்களாக அல்லாமல் டி. பி. யின் அழிவுப் பாதையின்றும் தம்மை விடுவிக்க முயல்வது நல்லதல்லவா? ஏனென்றால் புற அழுத்தங்களை சரிவர கையாள முடியாத நிலையில் அவ் அழுத்தங்களுக்கு தம்மை உட்படுத்தி இசைவு பெற்று இலக்குகளை கைவிடுவோர் ஒன்றில் தமது இயல்பை இயலாமையை உணர்ந்து தம்மைத்தாமே அப்புறப்படுத்த வேண்டும்.-அல்லது இவ் அழுத்தங்களுக்கு தாக்குப் பிடிப்பவரோடு இணைந்து தம்மையும் புதுப்பிக்கவேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் தாம் சார்ந்த இனத்திற்கு பெரும் அவலத்தையும் ஆபத்தையும் இவர்கள் உருவாக்கி விடுவார்கள் என்பது முன்னாள் தமிழ்க் குழுக்கள் மூலம் எமதுவரலாறு எமக்கு கற்பிக்கும் பாடமல்லவா? ஆனால் இதனை இவர்கள் உணர்வார்களா? வணிக நிறுவனங்கள் போல் இனம் சார்ந்த அடையாளத்தைக் கொண்ட அடையாளச் சிட்டைகளை வைத்துக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்யும் இழிநிலையே இவர்கட்கு வாய்ந்த அரசியலாகிவிடும். எனவே இவர்களின் போக்கானது வரலாற்றின் ஒரு கட்டத்தில் வளர முடியாது தேங்கிக் குட்டையாகிப் போகும். இவர்கட்காக வருந்துவதைத் தவிர நாம் என்ன செய்ய முடியும்?

ஏனென்றால் அன்றிலிருந்து இன்று வரை தமக்குமேல் போடப்பட்ட அழுத்தங்களை பக்குவமாக கையாண்டு தமிழீழ மக்கள் மனதில் கனன்று எரியும் விடுதலைத்தீயை அணைந்து விடாமல் காத்து நிற்கும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தோடு இணைந்து விட்ட எம் மக்கள் இவர்களின் சலசலப்புக்களை ஒரு பொருட்டாகவே கருதார். இந்திய வல்லாண்மையின் சருவ அதிகாரங்களையும் குவித்து தனது விரல் நுனியில் வைத்து புலிகள் மேல் அழுத்தம் போட்டு அடக்க முயன்ற தீட்சித், காலம்கடந்த ஞானமாக இப்போது உதிர்க்கும் பொன்மொழிகள் புலிகளை வரலாறு விடுவிக்கின்றது. என்பதே பொருளல்லவா?

# நியூயோர்க் நகரில் ஒரு கறுப்பர் சேரி இலக்கியத்தில் உருவாக்கிய மறுமலர்ச்சி

ஹார்லம், கறுப்புப்பண்பாட்டின் தலைநகரம் நியூயோர்க் நகரத்தின் இதயப் பகுதியில் அமைந்த மிகப் பெரிய கறுப்புச்சேரி இதற்கென்று தனியாக தேவாலயங்கள் சமூகக் கூடங்கள், நாடக அரங்குகள், கடைகள் கேளிக்கை விடுதிகள் அனைத்தும் நீக்ரோக்களின் அடையாளங்களைப் பறைசாற்றிக் கொண்டு எழுந்தன.

இங்குதான் அமெரிக்க-ஆப்பிரிக்கர்களின் பண்பாட்டு மறுமலர்ச்சி விதையூன்றி முளைவிட்டு, சிறுசெடியாக நிமிர்ந்து அபரிமிதமான ஆற்றலுடன் விழுதுகளோடு கால் பரப்பிய மரமாக எழுந்தது அமெரிக்க தலித்துக்களான நீக்ரோக்களின் இலக்கியமும் இசையும் பிற கலைகளும் புதிய வேகம் பெற்று வளர்ந்து இன்று அமெரிக்க வெள்ளை உலகத்தாலும் மறுதலிக்க முடியாத அளவுக்கு வளர்ந்தது.

ஹார்லம்மில் எழுதத் தொடங்கிய இலக்கியவாதிகள் ஒரே சிந்தனைப் போக்கு கொண்டவர்கள் என்று நாம்சொல்லி விடமுடியாது இவர்கள் தனித் தனி போக்குகளுடன் தான் இலக்கியம் படைத்தனர்,

ஆனால் அவர்களுக்குள் ஒரு கூட்டுக்கனவு இருந்தது. அனைவருக்கும் பொதுவான கறுப்பு அனுபவம்- இந்த கறுப்பு அனுபவம் இதற்கு முந்திய தலைமுறை கறுப்பு அடிமைகளுக்கும் தெரிந்தது தான் ஆனால் அவற்றை எல்லாம் இலக்கியமாக - இசையாக நாடகமாக ஓவியமாக வெளிப்படுத்தத் தேவையான ஓய்வுடன் கூடிய ஒரு மத்திய தர வர்க்கம் அங்கே அப்போது இல்லை.

1920-களில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் காரணங்களினால் நிகழ்ந்ததே ஹெர்லம் மறுமலர்ச்சி இந்தக் காலகட்டத்தில் எழுந்த 'புதிய யுகம் புதிய ஒழுக்கம்' புதிய பெண்மை ஆகிய கோஷங்களோடு புதிய நீக்ரோ எனும் கருத்தும் முன் வைக்கப்பட்டது இது ஹார்லம்மில் வைக்கோல்போரில்பட்டதீப்பொறியாகப் பற்றி எரிந்தது

1890-களில் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலிருந்தும் மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்தும் ஏராளமான கறுப்பர்கள் நியூயோர்க்கில் குடியேறினர் இவர்கள் அனைவரும் தங்குவதற்கு வீடு தேவைப்பட்டது அப்போது லீனாக்கஸ்அவென்யூ சுரங்கப்பாதை அமைக்கப்படாத காரணத்தினால் ஹார்லம்மில் இருந்த வீடுகளின் யாரும் வாடகைக்குப் போக விரும்பவில்லை இந்த நேரத்தில் கறுப்பு தரகு வியாபாரி பல கறுப்பர்களை இங்கு குடியேற்றினர் வெள்ளையர்களும் வாடகை கிடைத்தால் போதும் என்று மெத்தனமாக இருந்தனர்,

நாளடைவில் நிறைய கறுப்பர்கள் இங்கு குடியேறிவிடவே வெள்ளை உலகம் திடீர் என்று விழித்துக்கொண்டது ஹட்சன் ஒரு நிதிநிறுவனத்தின் உதவியுடன் கறுப்பர்கள் குடியிருந்தவீடுகளைவிலைக்கு வாங்கி அவர்களை காலி செய்யுமாறு வற்புறுத்தியது தனியான நிதி நிறுவனம் ஒன்றை நிறுவி பல அடுக்குமாடிக்கட்டிடங்களை விலைக்கு வாங்கி அதிலிருந்த வெள்ளையர்களை விலைக்கு வாங்கி கறுப்பர்களை அங்கு குடியேற்றியது அத்தகைய முயற்சிகளில் இன்னும் பல கறுப்பர்கள் முனைந்தனர்.

போரினால் நியூயோர்க்கில் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையை நீக்க,தெற்குப் பகுதியிலிருந்து ஏராளமான கறுப்பர்கள் நியூயோர்க்கிற்கு வந்து இறங்கினர்,

கறுப்பு மனிதன் தனக்கான ஒரு சுயகெளரவத்தைக் கண்டெடுக்க முடிந்தது, இந்தப் புதிய புரிதல் ஹார்லம்மில் புதிய கலை- இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கியது 1924இல் அமெரிக்க இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாக 'ஹார்லம் மறுமலர்ச்சி' அங்கீகரிக்கப்பட்டு விட்டது.

புதிய நீக்ரோ எழுச்சியின் சகல பண்புக் கூறுகளையும் ஹார்லம் மறுமலர்ச்சி பிரதிபலித்தது கறுப்பு இலக்கிய மறுமலர்ச்சி என்று இதனை வர்ணிப்பதால், இது வெறும் இனவெறிவாதத்தால் மட்டும் நிகழ்ந்தது என நாம்தவறாகக் கணித்து விடக்கூடாது- ழான் பால் சார்த்தர் ஒரு முறை குறிப்பிட்டது போல ஐன்ஸ்டீன் பிரபஞ்சம் குறித்தசார்பியல் கோட்பாடு இலக்கிய உலகிற்கு பொருத்தமானது தான்- அமெரிக்க வெள்ளையர்களின் உலகினுள் நிகழ்ந்த சில பண்பாட்டுக் கலகங்களும் கூட இந்த கறுப்பு இலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றன- முதல் உலகிற்கு போருக்கு பிறகு, உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்களும் கூட இதன் மீது ரேகை பதித்திருக்கிறது இதன் முக்கிய போக்குகளாக இவற்றைக் குறிப்பிடலாம்.

(1)அமெரிக்க கலை -இலக்கியத்தில் கறுப்பர்களின் சிறப்பான பங்களிப்பைக் கண்டெடுத்துச் சிறப்பித்தது. (2) தொடக்க கால கறுப்பு இலக்கிய முயற்சிகளில்இருந்த வெள்ளையர்களின் இலக்கிய பாணிகளைப் போலி செய்யும் வான்கோழித் தனத்தை வன்மையாகக் கண்டித்து ஒதுக்கியது- (3)நீக்ரோக்களின் அன்றாட வாழ்வின் சிறப்பம்சங்களைஇசைப் பாடல்கள், மக்கள் இசை, நாட்டுப்புறக் கதைகள், பண்ணை அடிமை நாட்களின் விடுகதைகள் பழமொழிகள் இவற்றை எல்லாம் உயர்த்திப் பிடித்தது (4) இலக்கியத்திற்கான கருப்பொருள்களை. அன்றாட வாழ்விற்கான, சவால்களை, எதிர்கொண்ட ஏழை மக்களின் அனுபவங்களிலிருந்து தேர்ந்தெடுத்தது (5)நீக்ரோக்களை அடிமைப் படுத்தும் முயற்சிகள் அனைத்திற்கும் எதிராக கலகக் குரல் எழுப்பி அவற்றை எதிர்த்தது

1919இல் 'சிவந்த கோடை காலம்' என்று அழைக்கப்பட்ட காலகட்டத்தில் இருபத்தைந்து நகரங்களில் வெள்ளையர்கள் நீக்ரோக்களின் மீது பயங்கர வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர் இந்த அனுபவம் ஹார்லம் எழுத்தாளர்களிடம்ஒரு புதிய புரிதலை உண்டாக்கியது அவர்கள் கறுப்பன் தான் உன்னதமானவன் என்று உரத்துப் பேசினார்கள்

அதே நேரத்தில் ஹார்லமின் அரசியல் கோட்பாடான 'நிபந்தனையுடன் கூடிய ஒற்றுமை' என்பதை வெள்ளை அமெரிக்காவின் முன் வைத்தனர் இந்த எழுத்தாளர்கள்

ஹார்லம் மறுமலர்ச்சியை அதன் முக்கிய பங்களிப்பாளராக இருந்த ஆர்ணர் பாண்டம்ஸ் இரு பகுதிகளாகப் பிரிக்கின்றார்

முதலாம் காலகட்டம் 1921-24களில் கறுப்பு இலக்கியத்தில் இனப்பெருமையை பறைசாற்றும் பிரசார காலகட்டம் தங்களது தனி அடையாளங்களை வற்புறுத்தி அவற்றைச் சிறப்பித்தது இதுவெள்ளையர்கள் ஜோடித்து வைத்திருந்தகறுப்பு மனிதனுக்கான வர்ணனையை உடைத்துப் போட்டது-

இரண்டாம் காலகட்டம் 1924-31களில் வெள்ளை இலககிய உலகத்தின் அங்கீகாரத்துடன் நிகழ்ந்த கலை நேர்த்தியும், இலக்கிய பரிசோதனைகளும் நிகழ்ந்த காலம்

1924இல் சார்லஸ் எஸ் ஜான்சன்' வெளியே வாருங்கள்' எனும்ஒரு விருந்தை அமைத்தார்இதில கறுப்புக் கலை - இலக்கிய வாதிகளையும், வெள்ளைஉலகின்பிரபலஎழுத்தாளர் வெளியீட்டாளர் செல்வந்தர் அனைவரையும் ஒன்றாக சந்திக்க வைத்தார் இதனால் பல கறுப்பு எழுத்தாளர்களுக்குப் பிரபல வெளியீட்டாளர்கள் கிடைத்தனர்

பிரபல வெளியீட்டாளர்களுடனும், வெள்ளை இதழ்களுடனும் ஹார்லம் எழுத்தாளர்கள் முழுமையான தொடர்பு கொண்டிருந்த போதிலும், சுரண்டல் குறித்த விழிப்புடனேயே இருந்தார்கள்.

ஆனாலும். 'ஹார்லம் மறுமலர்ச்சி'யில் முதல் காலகட்டமான பிரசார காலம் பின்னாளில் பல கறுப்பு விமர்சகர்களாலும், வெள்ளை விமர்சகர்களாலும் கடுமையாகக் தாக்கப்பட்டது. ஹார்லம் மறுமலர்ச்சியின் மீதான விமரிசனத்தை வைக்காமல், இக் கட்டுரையை முடிப்பது முழுமையாக இருக்காது

ஹார்லம்மின் புகழ், கறுப்பு உலகத்தைக் கடந்து பரவியது வெள்ளை அறிவு ஜீவிகள் வெள்ளை அமெரிக்காவில்தாங்கள் வெறுப்பவற்றிற்கு ஒரு மாற்றுக் கிடைத்துவிட்டதாக ஹார்லம் எழுத்துக்களைப் போற்றினர். வெள்ளை எழுத்தாளர்கள்- கறுப்பு வாழ்க்கையைச் சுற்றித் தங்கள் படைப்புகளைச் செய்யத் தொடங்கினர் இது ஹார்லம் மறுமலர்ச்சிக்கு முன்னரேயே முயற்சி செய்யப்பட்டாலும்- மறுமலர்ச்சிக்கு பின்னர் புதிய வேகம் பெற்றது.

பணிவான, சோம்பேறித்தனமான குழந்தைத்தனமான பழைய நீக்ரோ உருவத்துடன் எந்தவிதமான கட்டுப்பாடுமற்ற ஒரு காட்டுமிராண்டித்தனமான ஒரு உருவமும் இணைந்து கொண்டது. இதனை கறுப்பு விமர்சகர்கள் குறை கூறினார்கள்.

ஆழ்ந்துசிந்தித்தால்அமெரிக்க மண்ணில்தலித்தானநீக்ரோவுக்கு எத்தகைய அவல நிலை நேர்ந்திருக்கின்றது என்று புரிந்து கொள்ளலாம்- ஹார்லம் மறுமலர்ச்சியில் ஆபிரிக்க மண்ணிற்கேஉரித்தானகலைக் கருவூலங்கள் வெள்ளையர்களிடம் சமஉரிமை கோரும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# ஜோசப்பாலாவின் - "தரிசனம்" ஒரு நோக்கு !

இந்த தேசத்தில் மக்களின் விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஆக்க இலக்கிய படைப்புக்களின் தேவை நிறையவே உண்டு.

இந்தமண்ணின் நிகழ்வுகள் வாழ்வியல் யதார்த்தங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டியவை. இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறுகளாகும்.

அந்நிய தேச இலக்கியங்களில் நாம் எமது முகங்களை தரிசிக்கமுடியாது; எமது காயங்கள், ரத்தங்கள், குதூகலங்கள் தியாகங்கள், வெற்றிகள் அனைத்துமே இன்றே பதிவாக வேண்டும்.

மெய்யான ஒரு இலக்கியவாதி மனிதர்களுடன் இந்த மண்ணையும் சேர்த்தே நேசிக்கிறான்-

ஜோசப்பாலா சமுதாயத்தின் மாற்றத்தை உணர்ந்து, சமீப காலத்தில் சிறுகதை எழுதுவதில் ஈடுபட்டுள்ளார் என்று அவதானிக்க முடிகின்றது-

'தரிசனம்' என்ற சிறுகதை தொகுப்பு பத்து சிறுகதைகளை உள்ளடக்கியுள்ளது.

'மிக அருமையானவை' என்று சொல்லக் கூடியதாக கதைகள் அதில் இல்லாவிடினும்சில கதைகள் சிறப்பானவையாக உள்ளன;

நூலாசிரியர் தனது வாழ்வியல் அனுபவங்களை இங்கு சிறுகதை இலக்கியமாக படைத்திருக்கலாம் என்று நம்பலாம்

ஆனால்-

இவர் ஒவ்வொரு கதைகளிலும் என்ன விஷயத்தை சொல்ல வருகின்றார் என்பது இக்கதைகளில் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆயினும் ஒன்று தெளிவாகப் புலப்படுகின்றது. அஃதாவது- இந்த சமுதாயத்தின் காயங்களை எண்ணி அவர் கலங்குவது- வெளிச்சம் எங்கும் விழ வேண்டும் என அவர் விரும்புவது தெரிசிறது

சரி! இனி விஷயத்திற்கு வருவோம்-

ஜோசப்பாலா இத்தொகுப்பில் உள்ள அநேக கதைகளில் கட்டுரை பாணியையே கையாண்டுள்ளார்.

உதாரணத்திற்கு 'புதிய பாதை' என்ற முதற்கதையை எடுத்துக் கொண்டால்- 'தன் தங்கைக்கு நல்ல வரன் ஒன்றை தேடி அலைந்த விமலன்-

சீதனத்திற்குவசதி இல்லாத காரணத்தினால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சந்திரனை தன் தங்கைக்கு திருமணம் செய்து வைத்து விட்டு தன்பணி முடிந்ததென குமாஸ்தா வேலையோடு கொழும்பில் தங்கிவிட்டான்,

பின்னர்-

தங்கை குடும்பத்தை பார்க்கும் எண்ணத்துடன் வந்த போது- அவர்கள் கடற்றொழில் மற்றும் உடலுழைப்பினால் முன்னேறியிருந்ததை அவதானிக்கிறான். விமலனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தங்கையின் கணவர் உழவு யந்திரம் வாங்கி ஓடுவதும் கூட விமலனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது

**அந்நிய இலக்கியங்களில் நாம் எமது முகங்களை தரிசிக்க முடியாது**

பின்னர்- கொழும்பிலிருந்து அகதியாக விமலன் வர நேர்ந்த போது- குடிசைத் தொழில்கள் மூலம் தன் தங்கை குடும்பத்தை நகர்த்துவதை பெருமையாக அண்ணன் பார்க்கிறான். அண்ணனும் தங்கை குடும்பத்துடன் சேர்ந்து அதில் ஈடுபடுகின்றான்.

இதுதான்கதையின்சுருக்கம் இந்த எழுத்தாளர், சிறுகதையின் வடிவத்தை புரிந்திருக்கின்ற அளவிற்கு அதன் உள்ளடக்கம், செழுமைகளை தெரிந்துகொண்டவராகவோ அல்லது அதன்மீது பரீட்சயம் கொண்டவராகவோ தெரியவில்லை.

ஆயினும் இந்த மண்ணில் மனிதர்கள் மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற உணர்வு இவரிடம் நிறையவேகாணப்படுகின்றது

பல கதைகளில் நூலாசிரியர் இதை வெளிப்படுத்துகின்றார்.

'புதிய பரம்பரை, பயன், புதிய பிறப்புகள்' ஆகிய கதைகளை சிறப்பானதுஎனச் சொல்லலாம். இவற்றில் 'பயன்' மிகச் சிறப்பானது. 'இரத்தம்' தேவை என்ற விளம்பரத்தை பத்திரிகையில் பார்த்த இருவரின் அலட்சியம் இங்குசொல்லப்பட்டிருக்கிறது

இந்த இருவரில் ஒருவரின் 'மனைவி' பாத்திரப்படைப்பு மூலமாக அவர்களின் சமூகப் பொறுப்பின்மை அம்பலப்படுத்தப்படுகின்றது;

மாடு - பால் இரண்டின் மூலமாக ரத்தத்தின் தேவை உணர்த்தப்படுகின்றது

பல கதைகளில் பல இடங்களில் 'உறவு... தரிசனம்' என்ற வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

'புதிய பரம்பரை' என்ற கதையில், 'தன் உறவை தரிசிக்க முனைந்தார்' என்றும், 'சோறும் சுதந்திரமும்' என்ற கதையில் 'தன் உறவை தரிசிக்க 'அந்தக்கடிதத்தைப் பிரித்தான்' என்றும்' உறவு' என்ற கதையில் தன் உறவின் தரிசனத்தை தெரிவித்தான்' என்றும் அதே கதையில் இன்னொரு இடத்தில் 'உறவை தரிசிக்க அம்மா வீட்டிற்கு சென்றான்' என்றும் 'நிவாரணம்' என்ற கதையில் சம்பாஷணையாக 'உறவுகளை தரிசிக்க ஆசையாகத் தானிருக்கு' என்றும் 'மகிழ்வின் மறுபக்கம்' என்ற இறுதிக் கதையின் 'உறவின் தரிசனத்தைக் காண' என்றும் அதே கதையில் இன்னொரு இடத்தில் 'உறவின் உயர்வை தரிசித்து வருகிறான்' என்றும் உள்ளன;

அப்பாடா! வார்த்தைகளுக்கு எத்துணை பஞ்சம்! இவை பெரும் குறைபாடுகளாகக் கொள்ளலாம்.

வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து தொழிலாளர், ஏழைகள்,ஒடுக்கப்பட்டோருக்கான பல கதைகளை நூலாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இந்த விதத்தில் இந்த சிறுகதைத் தொகுப்பு வெற்றி பெறுகிறது

இன்னொன்றையும் குறிப்பிட்டாகவேண்டும்

சமீப காலத்தில் அறிமுகமாகியஎழுத்தாளர்களில்ஜோசப்பாலாவும் குறிப்பிடத்தக்கவர்; எந்தநிலையிலும் சேராத துடிதுடிப்பாக இலக்கிய ஆக்கத்தில் ஈடுபடுபவர்களிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் என்று கூறலாம்.

**வவுனியா - திலீபன்**

(சிறுகதை)

# மனஉறுதி

எங்கோ ஓர் மரத்திலிருந்து குயில் ஒன்று கூவிக்கொண்டிருந்தது. அக் குயிலோசை அதிகாலையின் இனிமைக்கு மேலும் மெருகூட்டியது.

'பார் அதுகூட தன்வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன்தானே இப்படி நாள் தவறாமல் கூவுகின்றது' என்று தனக்குள் எண்ணியபடி கட்டிலில்புரண்டாள் தாரணி. ஆனாலும் அவள் மனம் அவதியுற்றபடி கிடந்தது.

'சீ... எனக்கு விடிவே இல்லையா...?

என் வாழ்க்கை இந்தக்கட்டிலோடேயே முடிந்துவிடுமா'' தாரணி தனக்குள் வெதும்பினாள்.

''டொக்டர் இண்டைக்கு வரட்டும் நான் கேக்கிறது கேக்கிறதுதான்!'' ஆழ மூச்சிழுத்தபடி தனது மனத்தின் தீர்மானத்தை உறுதியாக்கிக் கொண்டாள்.

'நான் காயப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன, இனியும் எவ்வளவு நாள் இப்படியே இயக்கத்துக்கு எந்தவித பிரயோசனமுமில்லாமல்கிடக்கப்போறன்!' தாரணியின் ஆன்மா குறுகுறுத்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த அந்த நிகழ்வு, தாரணியின் மனதை குடைந்தெடுத்தபடி இருந்தது.

தாரணி [illegible]யப்பட்ட சண்டையும், காயம்பட்டவுடன் அவள் அடைந்த நிலையும், சண்டை நடந்த இடமும் அவளது மனத்திரையில் நிழலாடின.

'அக்கா உங்களுக்குப் பக்கத்தால ஆமி முன்னேறுகிறான் - ஆமி முன்னேறுகிறான்...? என்ற வோக்கியின் குரலும் பிள்ளைகளை சண்டைக்கு ஆயத்தப்படுத்தியதும் '' எங்களுடைய நிலையை ஆமி கடப்பானாகின் அது எங்கள் 15பேரினது உடலைக் கடந்துதான் நடக்க முடியும் '' என்ற அவளின் தெளிவான கட்டளையும் அதற்கிணங்க பிள்ளைகள் தளராது சண்டையிட்டதையும் கட்டிலில் கிடந்தபடியே தராணி அசைபோட்டாள்.

ஆமி முன்னேறத் தொடங்கியதும் சண்டை தொடங்கிவிட்டது - எதிரியின் ஆயுத பலமோ பாரியது-தாரணியிடமும் அவளது பிள்ளைகளிடமும் சாதாரண ரைபிள்கள் தான்ஆனாலும் மன உறுதி என்ற 'பீரங்கிவண்டி' இவர்களிடமே இருந்தது. சண்டை கடுமையாக நடந்தது...

அரைமணி நேரம் வெடிமருந்துகளுடன்கரைந்துவிட்டது-

அப்போதுதான் சிறிவந்த ரவை ஒன்று தாரணியின் ஒரு தொடையைத்துளைத்துச் சென்று மறு தொடையில் போய்ச் சிறைப்பட்டது- ஆனாலும் காயத்தைப்பற்றி தாரணி கவனிக்கவும் இல்லை அதைக் கவனிக்க அவளுக்கு நேரமும் இருக்கவில்லை- அவள் தொடர்ந்தும் சண்டையை வழிநடாத்தினாள்- சிறிது நேரத்தில் சோர்ந்து வீழ்ந்த தாரணி களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்-

தாரணியைப்பார்வையிட்டு அவளின் காயங்களுக்குக் கட்டுப் போட்டபடி அருகில் நின்ற தாதியிடம் வைத்தியர் கூறினார் 'ஆளுக்குக் கொஞ்சம் கடுமைதான் ஆனாலும் இவள் ஒரு போராளி-அவளை நாங்கள் சாகவிடக் கூடாது. இருந்தாலும் தேவையான மருந்து இப்போது இல்லையே'' என்று இருவரும் வேதனைப்பட்டனர்-

காலம் எவருக்காகவும் காத்திருக்காது வேகமாக ஓடிக்கொண்டிருந்தது-

வேதனைத் தீயில் தாரணியின் மனம் வெந்துகொண்டிருந்தாலும் அவளது சிந்தனை இனிச் செய்யவிருக்கும் போராட்டப்பணி பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது- களத்தில் வீரச்சாவடைய வேண்டும் என்ற ஆசையும் இடையே எட்டிப் பார்த்தது.

இந்த நினைவுகளைக் கலைப்பதைப்போல வைத்தியரின் வருகை இருந்தது. அவர் நேராகத் தாரணியிடமே வந்தார்-படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து உட்கார்ந்த தாரணி'டொக்டர்இப்படியே தான் நான் இருப்பேனா? இயக்கத்துக்குப் பயன் இல்லாமல் இப்படியிருக்க என்னால் முடியாது- என்னை சுகப்படுத்துங்கோ' இல்லையெண்டால் முகாமுக்கு அனுப்புங்கோ... என்று சினந்துவிட்டு... ''நான் கேட்டாலும் ஒன்றும்சொல்லிறியளில்லையே'' என உணர்வு தோய்ந்த குரலில் அவள் அங்கலாய்த்தாள்-

அப்போதுதான் வைத்தியர் தாரணிக்கு உண்மையைக் கூறத் தொடங்கினார். ''பிள்ளை மருந்துகள்சரியான தட்டுப்பாடாய்க்கிடக்கு-உம்முடைய காலில் ஒரு ரவை கிடக்குது- அதை சத்திர சிகிச்சை மூலம் வெளியில் எடுத்தால்தான் நீர் எழும்பி நடக்கலாம்- எல்லா இடமும் தேடிப்பாத்தாகிவிட்டது- ஆனால் அந்த மருந்து கிடைக்கவில்லையே'' என்றார்- இந்த நிலையில் தாரணியை மறித்து வைத்திருந்துதான் என்ன செய்வது என்று எண்ணியவர், அவளை போராளிகளின் மருத்துவ வீட்டிற்கு அனுப்பிவைத்தார்-

மருத்துவ வீட்டிற்கு வந்த பின் தாரணி சிறிது சந்தோசமடைந்திருந்தாலும் அங்கே வந்துபோகும் போராளிகளிடம் 'சண்டைக்கு கூட்டிக்கொண்டுபோங்கோ' என்று அவள் கூறத்தவறுவதில்லை-தாரணியின் இந்த உணர்வு மருத்துவ வீட்டில் இருந்தபெண்வைத்தியரது மனதைப்பெரிதும் ஈர்த்தது- தாரணியின் உணர்வை மதித்த இந்த வைத்தியரும் பல இடங்களுக்குச் சென்று மயக்க மருந்தைப் பெறமுயன்றார்- எங்குமே கிடைக்கவில்லை- சில நாட்களில் அது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் வைத்தியர் இருந்தார்.

''தாரணி அம்மா இன்னும் கொஞ்ச நாளில எங்களுக்கு மருந்து வந்து விடும் பொறுமையாக இரம்மா'' என்று அந்தப் பெண் வைத்தியர் கூறி முடிப்பதற்குள் இடைமறித்த தாரணி ''அன்ரி எனக்கு மயக்க மருந்து தேவையில்லை அது வரும்வரை இனியும் என்னாலகாத்திருக்க ஏலாது. ஒரு சவரக்கத்தியால வெட்டி ரவையை எடுத்து விடுங்கோ, நான் கெதியா சண்டையில பங்குபற்றவேணும்'' மூச்சு விடாமல் தாரணி கூறி முடித்தாள்.

## அறிவு

சில நிமிடங்கள் வரை எதுவும் பேசாது நின்ற வைத்தியர் தாரணியின் தலையைத் தடவியபடி ''அவசரப்படாதையம்மா. நீ சொல்லுகிற மாதிரி சத்திர சிகிச்சைசெய்ய முடியாது- அது தாங்க முடியாத வலியைத் தரும். அப்படி இதுவரை நான் சத்திர சிகிச்சை செய்ததும் இல்லை'' எனக் கனிவான மொழியில் அந்தப் பெண் வைத்தியர்கூறினார்-

ஆனால் அந்த கனிவை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தாரணியில்லை.

''அன்ரி இந்த மூன்று மாதமும் தொடர்ச்சியாக இந்த வேதனையைத் தாங்கிக் கொண்ட என்னால் இன்றைக்கு-சற்று அதிகமானவலியை கொஞ்ச நேரத்துக்குத் தாங்க மாட்டேனா? நீங்கள் யோசியாதேங்கோ? என்னால் தாங்க முடியும்'' தாரணி திடமாகவே தனது தீர்மானத்தைக் கூறி முடித்தாள்-

தாரணியின் உறுதியைக் கண்ட வைத்தியரும் ஒரு முடிவுக்கு வந்தார்.

வைத்தியர் சென்ற பின் சக பெண்போராளி ஒருவரிடம் இருந்து ஒரு 'பிளேட்டை' பெற்று அதையே பார்த்துக் கொண்டிருந்தாள் தாரணி- அந்த அறுவைச் சிகிச்சையை மயக்க மருந்தில்லாமல் ஏற்பதற்காகவே தான் இவ்விதம் செய்தாள்.

நேரம் கடந்து கொண்டிருந்தது- தயங்கியபடி இருந்த வைத்தியரை தாரணி மீண்டும் உற்சாகப்படுத்தினாள்- ''அன்ரி என்ன நோக்கம்- நேரம் போகுது- நான்அடுத்த சண்டைக்குப் போகவேணும்'' என்று வற்புறுத்தினாள் தராணி-

பொழுது மெல்லென மூச்சு விட்டுக் கொண்டிருந்தது-உறுதிக்கு உதாரணம் ஒன்று அரங்கேற ஆயத்தமானது-

''தாரணி அப்படியே படுத்திருங்கோ- ஆட்டக்கூடாது- நரம்புகள் வெட்டப்பட்டு விடும்'' சத்திர சிகிச்சை தொடங்கிவிட்டது- தாரணியின் காலில் வைத்தியர் ரவையைத் தேடத்தொடங்கினார்.

வலி தாரணியை வருத்தியது- ஆனாலும் சண்டையில் பங்குபெற வேண்டும் என்ற பிடிவாதம் அவளுக்கு வலி தீர்க்கும் மருந்தாகியது-

ஏறக்குறைய 15 நிமிடங்கள் யுகங்களைப் போலக் கடந்து விட்டன- இறுதியில் வைத்தியர் தனது முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டார்-

'எடுத்தாச்சோ அன்ரி' வலிக்கு மத்தியிலும் தாரணியை மகிழ்ச்சி அலை பற்றிப் பிடித்தது-

இந்த சத்திர சிகிச்சையில் மன உறுதியும் ஜன்னல் கம்பியுமே தாரணிக்கு மருந்தாக இருந்தன-

இன்று தாரணி களத்தில் நிற்கிறாள்- இவளது மனத்துணிவும் உறுதியும் பொருளாதாரத் தடையைப் பார்த்து ஏளனம் செய்கின்றன-

# திருவாளர் டிக்சிற்றுக்கு....
# ஒரு தமிழீழக் குடிமகனின் திறந்த மடல்

திருவாளர் டிக்சிற் அவர்களுக்கு!

உண்மைகளை உரிய காலத்தில் உணரத் தவறிய அதிகாரிகளால் துன்பப்பட நேர்ந்த மக்களில் ஒருவன் வரையும் மடலிது. பதவியில் இருந்தபோது பல்வேறு வேலைச் சுமைகளும் அழுத்தியதால் ஆழமான சிந்தனைகளுக்கு அவகாசம் இருக்கவில்லையோ என்ற ஐயத்தை இந்த பத்திரிகையில் நீங்கள் எழுதிய கட்டுரை ஏற்படுத்துகின்றது இருந்தும் அக்கட்டுரை ஏற்படுத்திய எண்ணத்தின் விளைவாக இம்மடலைத் தங்களுக்காக வரைய முனைகின்றேன். உயர் நிலை அதிகாரிகளாக- இராஜதந்திரிகளாக இருக்கும் பலரும் 'முன்னாள்' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஏனையவர்களுக்கு இலவசமான ஆலோசனைகளைக் கூற பத்திரிகைகளை பயன்படுத்திக் கொள்வது வழக்கம்தான். நீங்களும் அந்த வரிசையில் சேர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலும் பாக்கு நீரிணைக்கு இப்பால் நடக்கும் எமது போராட்டம் பற்றி இப்போதும் சிந்தனை கொண்டிருப்பதால் சில விடயங்களை இடித்துக் கூறவேண்டியது அவசியமாக இருக்கிறது.

முதலாவதாக தமிழீழத்தின் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தனியாட்சிக்காகப் போராடும் கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையிலிருந்து ஒரு இனமக்களின் வீரத் தலைவராக தன்னை மாற்றிக் கொண்டார் என்ற உண்மையை நீங்கள் இப்போதாவது உணர்ந்திருப்பது பாராட்டப்படவேண்டியதே. எனினும் தலைவரின் இந்த ஆளுமையையும்- தமிழீழப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தையும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே நீங்கள் புரிந்துகொண்டிருந்தால் திலீபனையும் குமரப்பா, புலேந்திரன் உட்பட சிறப்புமிக்க பல தளபதிகளையும் போராளிகளையும் பல நூறு தமிழ் மக்களையும் தமிழீழம் இழக்க நேர்ந்திருக்காது என்பது மட்டும் நிசம். கடந்தகால சம்பவங்களை மீண்டும் அசைபோடுவது கசப்பான அனுபவங்களை மட்டுமே மிஞ்சச் செய்யும் என்பதால் அதனைத் தவிர்த்துவிடுவது சிறந்ததாகலாம். ''கறந்த பால் முலைக்கு மீண்டும் ஏறாது தானே.''

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்பதை உதட்டளவில் மட்டுமே கூறிக்கொண்டு தமிழர்களுக்கு எதிரான இராணுவ அரசியல் நிலைப்பாட்டை மேற்கொள்வதே சிறிலங்கா அரசு கடைப்பிடிக்கும் போக்கு'' என்பதை சரியாகவே இனங்கண்டுள்ள நீங்கள் இப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கும் கருத்துக்கள் குறித்துத்தான் ஆட்சேபங்களை பதிவு செய்யவேண்டியுள்ளது. இது விடயத்தில் தமிழர்களுக்கு நியாயமானது கிடைக்கவேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய அதேசமயத்தில் இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாடு காக்கப்படல் வேண்டும் என்று நீங்கள் சுட்டிக் காட்டுவது தமிழர்கள் இதைத்தான் விரும்பவேண்டும் என்று வலியுறுத்துவதுபோலஉள்ளது எதைவிரும்பவேண்டும் என்று எவரையும் வற்புறுத்த முடியாது என்பதைப் பழுத்த இராஜதந்திரியான நீங்கள் இன்னமும் உணராமல் இருப்பது விந்தையே;

## நியாயமற்ற அச்சம்

''மத அல்லது இன அடிப்படையில் இலங்கை பிளவுபட்டால் அது இந்தியாவின் சொந்த நலன்களைப் பாதிக்கும்'' என்றும் ஏனையவை நாடுகளுடனான உறவுகளில் இந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டால் இந்தியக் குடியரசிலும் இதனைப் பிரயோகிப்பதில் கேள்விக்கு இடமிருக்காதுஎன்றும் நீங்கள் தெரிவித்திருப்பது தேவையற்ற ஒரு அச்சத்தின்வெளிப்பாடாகவே கருதமுடியும்.

தனது குழந்தைக்கு உணவூட்டும் ஒரு தாயிடம், 'உனது குழந்தை சாப்பிடுவதை பார்த்து எனது குழந்தையும் தனக்குப் பசிப்பதாகக்கூறி அடம்பிடிக்கின்றது. எனவே தயவு செய்து உனது குழந்தைக்கு உணவு ஊட்டாதே' என்று அயல் வீட்டுக்காரர் கூறினால் அது பொருத்தப்பாடானதா? எமக்கு சுதந்திரமும் பாதுகாப்புக்கான உத்தரவாதமும் தேவை. அதற்காக நாம் போராடுகின்றோம் எமக்கான சுதந்திரம் பெறுவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குள் கட்டுப்பாட்டிற்குள் தேசிய இனங்களை விழிப்படையச் செய்துவிடும் என்பதற்காக எமது சுதந்திரத்தைத் தடுக்க முனைவது எந்தவகையில் நியாயமாக இருக்கமுடியும் என்பது முதலாவதுகேள்வியாகும்.


இலங்கையின் ரூபா நோட்டுகளிலும், அஞ்சல் முத்திரைகளிலும் தமிழ்மொழி இடம்பிடித்திருப்பதைக் கண்டு 'பூரித்துவிடும்' தமிழ்நாட்டுக்காரர் சிலர் இந்தியாவில் தமிழ்மொழி உரிமைக்காக குரல்கொடுக்க முற்பட்டால் அதற்குநாம் எப்படி பொறுப்பாளிகளாக இருக்கமுடியும்.

மேலும் இந்த வகையில் மட்டுமன்றி வேறு ஏதாவது வழியிலாயினும் மேலும் எந்தவொரு தேசிய இனமும் அடக்கப்படுமாயின் அது எப்போதாவது விழிப்புப் பெறும் என்பதும், அது போராடி தன்னை விடுவித்துக்கொள்ளும் என்பதும் தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. இதனை உங்கள் அரச சேவைக் காலத்திலேயே நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். எனவே தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழீழப் போராட்டம் உந்து சக்தியாகி விடும் என்ற அச்சத்தில் அதை அடக்க வேண்டும் என்ற உங்கள் கருத்தானது 'தன் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டுவிட்டதாக' கருதும் பூனையின் எண்ணத்திற்கு சமமானதாகும்; இது இரண்டாவது விடயமாகும்.

1983ஆம் ஆண்டு முதல் இலங்கைத்தீவின் பிரச்சினைகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும், தலையிட்டும், தலையிடாமலும் செயற்பட்டு வந்த இந்திய அரசினை ஒரு காலத்தில் பிரதிநிதித்துவப்

(11ஆம்பக்கம் பார்க்க)

# சென்று வருக சிறந்து



## தமிழர் கல்வியின் குரல்
## தளராத நிலைப்பாட்டின் சின்னம்

### பேராசிரியர் துரைராசா பற்றிய ஒரு குறிப்பு

கார்த்திகேசு சிவத்தம்பி
முதுதமிழ்ப் பேராசிரியர்



Chairman

**THE REFUGEES REHABILITATION ORGANISATION LTD**

இம் மாதம் 31ம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது இரண்டாவது துணைவேந்தருக்குப் பிரியாவிடை வழங்குகின்றது.

இந்தப் பிரியாவிடையில் முழு யாழ்ப்பாணமுமே இணைந்து கொள்கிறது.

தனது ஆறுவருட காலச் சேவையில் பேராசிரியர் துரைராசா ஈட்டிக் கொண்ட பெரிய தேட்டம் இது தான். அவர் யாழ்ப்பாணத்துக் கல்வியினதும், அதற்கு மேலாகத் தமிழரின் தளர்ச்சியுறாத நிலைப்பாட்டினது சின்னமாக, அவற்றுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட குரலாக விளங்கினார்.

இந்தச் சாதனை பெரியது. இது தன் முயற்சியால் மாத்திரம் பெறப்படுவதன்று. பிறரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது, போற்றப்பட வேண்டியது. அந்த ஏற்பும் போற்றுகையும் பேராசிரியர் துரைராசாவுக்கிருந்தன.

பல்கலைக்கழக முகாமைத்துவம் என்பது அதிகாரப் பிரயோகத்தில் தங்கியிருப்பதில்லை. அற நேர்மையில், சமமானவர்களிடையே முதல்வராய், உத்தியோகத்தர்களுக்கு உதாரணமாய், மாணவர்களுக்கு இலட்சிய புருஷனாய் இருப்பதிலேயே அது தங்கிநிற்பது. பேராசிரியர் துரைராசாவிடம் அந்த முதன்மையும் முன்னுதாரணப்போக்கும் நிறைய இருக்கிறது.

யாழ்ப்பாண மக்களின் அல்லல் துன்பங்களிலெல்லாம் தனக்கும் பங்குவேண்டுமென்று தானே வந்து அந்தத் துன்பங்களைப் பகிர்ந்து கொண்டவர். துன்பங்களைப் பகிர்ந்து கொண்டதால் இந்த மண்ணின் இலட்சியக்கூறுக்கான குரலாகவும் ஒலிக்கக் கூடியதாகவிருந்தது.

மக்களோடிணைந்த மாண்பு காரணமாகப் பேராசிரியர் துரைராசாவின் புலமை மேன்மைகள் பெற வேண்டிய அளவு அழுத்தத்தைப் பெறாது போய்விடுகின்றன. பேராசிரியர் துரைராசா இந்த நாட்டின் மிகச் சிறந்த பொறியியலாளர்களுள் ஒருவர். குடியியற் பொறியியற்துறையின் சில அமிசங்களில் உலகப் பிரசித்தி பெற்ற அறிஞர். அவர் கூறும் ஆலோசனைகள் பணிப்புரைகளாகவே போற்றப்படுவதற்கான புலமைவலு உடையவை. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்ப் பதவியை ஏற்றபொழுது அத்துறையின் ஈடுபாடுகள் பலவற்றை இந்தப் பணிக்காகச் சுருக்கிக் கொண்டார். இந்த தியாகம் விலைமதிப்பற்றது.

இலங்கையின் பொறியியற் கல்வியில் துரைராசா அவர்கட்கு ஒரு முக்கிய இடமுண்டு பேராதனைப் பல்கலைகழகத்துப் பொறியியற் பீடாதிபதியாக இருந்த பொழுது ஏற்படுத்திய சாதனை இது. பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடாதிபதியாகப் பதவியேற்றதும், அக்கல்விமுறையின் பல புதிய விஸ்தரிப்புகளுக்கு ஊக்கினார்.

1988 - 1994க் காலப்பிரிவில் யாழ். பல்கலைக்கழகம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பல. அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்துப் பல்கலைக்கழகம் மூடப்படாது தொடர்ந்தியங்க வைத்தமைதான் இவரது பெருஞ் சாதனை.

இது வெறும் யந்திர கதியான தொடர்ச்சியாக இருக்காமல் உயிர்ப்பு நிறைந்த தொடர்ச்சியாக அமைந்தது. விவசாயபீட நிறுவுகை, பொறியியற்பீட தொடக்குகை ஆதியன இவர் காலத்து ஈட்டங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர் விருப்பினை இவர் பெற்றிருந்த முறைமை சிறப்பானது.


இந்தப் பிரியாவிடை யாழ்ப்பாணத்து மக்களின் செய்த நன்றியுடைமையின் வெளிப்பாடு- தன்நலமே இல்லாது கடமையாற்றிய ஒருவருக்கு, பொதுநலப் பிரியர்கள் வழங்கும் அன்பு விடை இது.

அவர் பணி செல்லுமிடங்களெல்லாம் சிறக்கட்டும் - அதற்கான தேகவலுவையும் செயற்பாட்டுக் களங்களையும் இறைவன் அவருக்கு வழங்கட்டும்.

இவை நிச்சயம் கிடைக்கும்.

ஏனெனில்

''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு''



## Professor Alagiah Thurairajah
## Vice - Chancellor

B.Sc. (Eng.) (SL) 1957; Ph.D. (Cantab.) 1962.

**Lecturer in Civil Engineering - University of Sri Lanka (1962-1971)**
**Professor of Civil Engineering-University of Sri Lanka (1971- )**
**Visiting Professor at University of British Columbia, Canada, (1977-1978)**
**Dean, Faculty of Engineering, University of Peradeniya (1975-1977)(1982-1985)**
**Professor of Civil Engineering, Open University, (1985- )**
**Dean, Faculty of Engineering Technology (1987-1988)**
**VICE-CHANCELLOR, UNIVERSITY OF JAFFNA (1988-1994)**

Member of the Institution of Engineers, Sri Lanka
Vice-President, Institution of Engineers Sri-Lanka (1986-1989)
President, Institution of Engineers, Sri-Lanka (1989-1990)
Fellow of the Institution of Engineers, London (1985)
Fellow of the National Academy of Census, Sri-Lanka (1977)
Member, Board of Trustees, Janasaviya Trust Fund (1990- )
Member, Tertiary and Vocational Education Commission (1990- )
MEMBER, BOARD OF GOVERNORS SRI-LANKA REDCROSS SOCIETY
JAFFNA BRANCH COUNCIL, 1993



பேராசிரியர் அ- துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து மாற்றலாகிச் செல்வது எமது நொந்த சமுதாயத்திற்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும். கல்வி எமது சமுதாயத்தின் முக்கிய முதலீடு என உணர்ந்து குண்டுத் தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுக்கள் மத்தியிலும் உலகமே வியக்கும் வண்ணம் யாழ் பல்கலைக்கழகத்தை தொடர்ந்து இயங்கச் செய்த பெருமை பேராசிரியர் துரைராசாவையே சாரும்.

மாடமாளிகைகள் தேவையில்லை, குடிசையிலே பொறியியல் கற்பிக்கலாம்; பின்னர் வசதி வரும் போது கட்டிடங்களைக் கட்டலாம் என கூறி பொறியியல் பீடத்தை ஆரம்பித்து வைத்த பெருமையும் அவரையே சாரும். நேர்மையும் கண்ணியமும் கொண்டு தன்னலம் கருதாது சமுதாயத்தின் மேம்பாட்டையே குறிக்கோளாக கொண்டு அவர் சலிக்காது உழைத்தார். ஏனையோரின் உணர்வுகளை மதித்து எல்லோருடைய மனங்களும் குளிரும்படியாக செயற்படுவதில் அவருக்கு நிகர் அவரே!

வைத்தியகலாநிதி V. கருணாகரன், தலைவர் யாழ் வைத்தியர் சங்கம்.



எந்த ஒரு நாட்டிலும் அதியுயர் கல்விக் கூடங்களாக விளங்குபவை சர்வ கலாசாலைகளே- இச் சர்வகலாசாலைகளில் கல்வியைப் போதிப்பவர்கள் மிகச் சிறந்த கல்விமான்களே- இக்கல்விமான்களுக் கெல்லாம் தலைவர்களாகச் செயற்பட்டு கல்விக்கடலை ஆள்பவர்கள் நிச்சயமாக அதியுயர் கல்விமான்களே. இந்த வகையில் கல்விக்குப் பெயர்போன யாழ் மண்ணிலமைந்த சர்வகலாசாலையின் துணைவேந்தர்பதவியை1988-09-01 ஆண்டு முதல் 1991-03-31 வரையும், 1991-09-01 முதல் 1994-03-31 வரையும் வகித்து இன்று கொழும்பு திறந்த பல்கலைக்கழக பொறியியல்துறைக்கு மாற்றலாகிப் போகின்ற அதிசிறந்த கல்விமான் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் இந் நாட்டின் சர்வ கலாசாலைகளுக் கெல்லாம் வேந்தராக விளங்கும் திறமையுள்ளவர்.

எல்லாம்வல்ல இறைவனால் அவரை நீடூழி வாழவைத்து நாமெல்லாம் பெரும் பயனைப் பெற வழி சமைக்க முடியும் - அவ்வாறு வாழவைக்குமாறு இறைவனை வேண்டுவோமாக இறைவனாசியும் எனதாசியும் என்றைக்கும அவர்பக்கம் நிற்கட்டும்-

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்



அறிவிலே தெளிவு; நெஞ்சிலே உறுதி! அகத்திலே அன்பு என்பன ஒருங்கிணைந்த ஒரு புண்ணியப் பிறவி இவர். இவற்றையெல்லாம் உன்னிப்பாக நோக்கி நிற்கும் எமது சமூகம் இன்று எத்தனை எத்தனை விதத்தில்இவரைப் பாராட்டுகிறது நாளெல்லாம் விழா எடுத்து நன்றி பாராட்டுகிறதே! இதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்திக்கும் போது உண்மையும் நேர்மையும் மனிதாபிமானமும் நாட்டுப் பற்றும் எவ்வளவுக்கு மக்களால் மதிப்பளித்து வரவேற்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

துணைவேந்தர் துரைராசா அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் எமது மண்ணுக்கும் கிடைத்த ஒரு பாரிய சொத்து; வாக்கிலே இனிமை; வாழ்விலே எளிமை; பண்பிலே உயர்வு; படிப்பிலே மேதை எனறு சொல்லிக்கொண்டே போகலாம். இதனாலே தனக்கும் பிறர்க்கும் இனிமையாக வாழ்ந்தவர்.

எனவே பேராசிரியர் துணைவேந்தர் அவர்களை வாழ்த்துகின்ற பணியில் எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தமை பெருமிதமளிக்கிறது என்பதைக் கூறி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி (சமாதான நீதவான்)
தலைவர், துர்க்காதேவி மகளிர் இல்லம்.



பேராசிரியர்அ, துரைராசா அவர்களைப் பற்றி யான் எனது கருத்தைக கூறுவதென்பது சூரியனைக் குப்பி லாம்பின் மூலம் மற்றையோருக்குக் காண்பிக்க முயலுவது போன்றதொன்றென்பதை உளப்பூர்வமாக யான் அறிவேன்- ஒரு பல்கலைக் கழகத்தின் சர்வதேசத்தரம். அப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரின் கல்வித் தகைமையிலும், செயற்பாட்டிலும், ஆசிரியர்களின் கல்வித் தகைமையிலும், பாடநெறியிலும், சமூகப் பயன்பாட்டுத் தன்மையிலும் தங்கியுள்ளது, உலகப் பல்கலைக் கழகங்களின் வரலாற்றுடன் இந்த மண்ணின் பல்கலைக் கழகத்தை ஒப்பிடுகின்ற போது, இது ஒரு சிறு குழந்தையே- இக்குழந்தையை உலகப் பல்வேறு விற்பன்னர்களின் பார்வைக்குக் கொண்டு வந்த பெருமை இப்பெருமகனையே சாரும் என்றால் அது மிகையாகாது என்று நம்புகிறேன்.

அவர் நீடூழி வாழ்ந்து மென்மேலும் நிறையச் சேவை செய்யவேண்டுமென்பதே தமிழ் மக்களின் பேரவா ஆகும்-

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்கள்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் துணைவேந்தர் துரைராஜா அவர்களது சேவை வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. சோதனைகள் மிகுந்த இக்காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் தலைமைப்பதவியினை வகித்து அதன் வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட இடர்கள், முட்டுக்கட்டைகள் என்பவற்றை எதிர்கொண்டு வெற்றிகண்ட பெருமை இவரைச்சாரும்.

மனிதருள் மாணிக்கமாகப் போற்றத் தக்க உயர்ந்த பண்பாளர்; கற்றோர்க்கு இலக்கணமாக விளங்கும் நிறைகுடம். தான் சார்ந்திருக்கும் துறையில் அறிஞர்கள் போற்றும் பேரறிஞர்.

பல்கலைக்கழகஎல்லையைத் தாண்டி மண்ணை, மக்களை, சமூகத்தை நேசித்ததுடன் இவைகளின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். எளிமையான தோற்றத்தினுள் பிரமாண்டமான ஆளுமையைச் சுமந்து நிற்பவர்.

துணைவேந்தர் பணியிலிருந்து சிறப்பாக வழிகாட்டிய அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைவதுடன், அவரது எதிர்காலம் மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-8905)



அறிவு, ஆற்றல், தன்னலமற்ற மறுப்பு என்னும் உயர்பண்புகளால் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருப்பவர்- ஒரு சுடரிலிருந்து பல விளக்குகளைக் கொழுத்துவது போலப் பேராதனைப்பொறியியற்துறையை வெற்றிகரமாக நடாத்தி, ஆயிரக் கணக்கான பொறியியலாளரை நாடெடுங்கும் ஒளிவீசச் செய்தவர்- யாழ்ப்பாணம் செய்த தவப்பயனாக, அதன் ஒரே பல்கலைக்கழகத்தை மிகக் கடினமான கால கட்டத்தில் பொறுப்பேற்று, வெற்றிகரமாக நடாத்தியவர் உபவேந்தர் துரைராஜா அவர்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் அபிவிருத்தியைப் பன்முகப்படுத்தி உயர் ஆராய்ச்சிகளுக்கு வாய்ப்பு அளித்தார். பிரதேசத்தின் பன்முக வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டு தம் பூரண பங்களிப்பைச் செய்தார் தந்தக் கோபுரத்தின் உச்சியில் அமர்ந்த கூட்டுக்கிளி போலன்றி, சூழலையும் உயர்வுறுத்தும் விரிவான பார்வையுடன் பணிபுரிந்தார். போர்க்கால சூழ்நிலையில் ஒருசாதாரண குடிமகன் போலவே கஷ்டங்களைப் புன்சிரிப்புடன் நோக்கும் பண்பினராய் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தார். மக்கள் சேவையில் ஈடுபடுவோருக்கு ஒரு முன்மாதிரியானார்.

லயன் சு. இராமகிருஷ்ணன்
பிராந்தியத் தலைவர் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B




எளிமையான தோற்றம், கம்பீரமான உருவம், இன்சொல் பேச்சு, செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்பு, எதிலும் நிதானப் போக்கு, நேர்மைத்திறம், கல்விக்கேள்விகளில் அனுபவத்தில் ஆற்றலில் மூத்த பெரியோர்களின் நட்பு, அவர்கள் தம் துணை. இவற்றில் விளைந்த ஆளுமை, நீண்டு செல்லும் கல்வித் தகைமை.

சகலவகையிலும் சுயேட்சையானதொரு பல்கலைக்கழகத்துன் உபவேந்தர் என்ற படாடோபமோ, கர்வமோ இல்லாதவரான பேராசிரியர் அ- துரைராசா அவர்களைப்பற்றி நாம் மட்டுமன்றி அவர்களை அறிந்த அனைவரும் கொண்டுள்ள கணிப்பே இவை-

பேராசிரியர் துரைராசா அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வித்தரத்தை திட்டமிடுவதிலும் இணைத்து நெறிப்படுத்துவதிலும் காட்டி வந்த அக்கறையும், முயற்சியும் சாதனை என்று வியந்திடுமளவிற்கு வெற்றியளித்ததைப் பலரும் அறிவர். இத்துணை செயற்பாட்டுக்கு மத்தியிலும் பேராசிரியர் துரைராசா அவர்கள் தம்மைப் பெற்றெடுத்த மண்ணின் அபிவிருத்திக்கும் கைகொடுத்து வந்துள்ளார்கள்-

கலாநிதி க. கனகராசா
சமாதான நீதவான்
அதிபர் மில்க்வைற் தொழிற்சாலை




பேரன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் மனிதநேயமும் நேர்மையும் வேறுபாடின்றி அனைவரையும் மதிக்கின்ற பண்பும் தன்னலம் கருதாத சேவையும் - ஒரு மனிதன் சமுதாயத்தில் எப்படி ஒவ்வொருவராலும் மதிக்கப்படுகின்ற உயர்ந்த மனிதனாக வாழ முடியும் என்பதற்கு இவருடைய வாழ்க்கை எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு முன்னுதாரணம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் சொத்துப்போன்று தான் சார்ந்த கல்வித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற இந்த நடமாடும் தனிமனித பல்கலைக்கழகமும் எமக்குக் கிடைத்த இன்னுமொரு அறிவுக்களஞ்சியமாகும்.

நொந்தவர்களுக்கு சேவை செய்யும் செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராகிய பேராசிரியர் அ. துரைராஜா, நோய் நொடியின்றி இன்னும் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று மனமார வாழ்த்துகிறேன்.

வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர் சீர்மாறன்
(ஆளுநர் சபை உறுப்பினர் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை)



யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஆறு வருடங்கள் தன்னலமற்ற அளப்பரிய சேவை ஆற்றி ஓய்வு பெற்று, கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திற்கு பதவி ஏற்றுச் செல்கின்ற எனது அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேராசிரியர் அ- துரைராஜா அவர்களே பல இடையூறுகளுக்கு மத்தியிலும் மலர்ந்த முகத்துடன் சோதனையான கால கட்டங்கள் பலவற்றைக் கடந்து எமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக புதிய பாதை அமைத்து அதில் எம்மை வழிநடாத்தி வந்த உங்கள பாதங்களில் தலைசாய்த்து வணங்குகின்றேன்-

ஒரு துணைவேந்தரது கடமைகள் கல்வி அபிவிருத்தி, நிர்வாகம் என்ற குறுகிய வட்டத்தில் அடங்கி நின்றுவிடாது அதன் எல்லைகளை மக்களின் இனவிடுதலை இன, மத, ஒருமைப்பாடு, சமயம், கலை கலாசார அபிவிருத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிஎன்ற பரந்த எல்லைகளுக்கு விஸ்தரித்து ஒரு துணைவேந்தருக்கு முன் உதாரணமாக வாழ்ந்து காட்டினார்-

எமது மண்ணில் உள்ள இப்பல்கலைக்கழகத்திற்கும் எமது மக்களிற்கும் தங்களினால் ஆற்றப்பட்ட சேவை இந்த மண் உள்ளவரையும் நிலைத்திருக்கும்-

ந. யோகராஜன்
சமாதான நீதவான்
தலைவர் -மூலிகைப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிறுவனம், S.L.T.E.S

### பழசும் புதுசும்

# தமிழர் நாட்டை வெல்வதும் எளிதோ!

மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், தேனும் எவ்விதமான உழவும் இன்றியே கிடைப்பது பறம்பு நாடு. வானளவு உயரமும், அகலமும், நீளமும், உடைய நாடு இது. மலையின் சுனைகள் வான்மீன் போன்று விளங்கும் நாடும் அதுவாகும். இந்த நாட்டை முற்றுகையிட்டு முறியடிக்கும் நோக்கில் மூன்று வேந்தர்களும் சேர்ந்து யானைகளை மரத்திற்கு ஒன்றாகக் கட்டி வைத்திருந்தாலும், இருக்கும் இடமெங்கும் தேர்ப்படையால் நிறைத்து இருந்திராயினும், பறம்பு நாட்டையும் பாரியையும் வெல்வது இயலாத காரியமாகும். புறநானூற்று நூலின் 109-வது பாடலாக மூவேந்தர் முன் கபிலர் என்ற தலைப்பில் இடம்பெறும் இப்பாடல் வருமாறு அமைகின்றது;

அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே!
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே!
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே!
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே!
நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே!
வான் கண் அற்று அவன் மலையே வானத்து
மீன் கண் அற்று அதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்,
தாளிற் கொள்ளலிர் வாளில் தாரலன்
யான் அறிகுவன் அது கொள்ளுமாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின் வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே!

கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக இராணுவ பொருளாதார முற்றுகைகளுக்கு உள்ளாகி இருக்கும் எமது தேசத்தையும், இத்தனை நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கும் போதும் உறுதி குலையாது தாயக விடுதலையை நேசித்து அதற்காகப் போரிடும் விடுதலைப் புலிகளுடன் அணிவகுத்து நிற்கும் எமது மக்களையும் எண்ணிப் பார்க்கும்போது இவ்வாறே கூறத் தோன்றுகிறது;

எளிதோ வெல்வது தமிழர் நாட்டை!
நளிகொள் முப்படை முற்றுகை யிடினும்;
எளிதோ வெல்வது தமிழர் நாட்டை!
பொழுதோடு எழுந்தோடி உழைக்கும் மக்கள்
பொழியும் வியர்வை ஆறாகப் பாய
விளையும் பயிரால் வளம் பல சேரும்
இறுகள் மிதிக்க உருளும் வண்டிகள்
சிறிலங்கா முகத்தில் இறு உதையாகி
போக்குவரவில் விதித்த தடைகள்
பொடிப் பொடியாகி நொருங்கிப் போகும்!
காற்றையும் எதிர்த்துக் கண்ணாடியுள் நின்று
ஏற்றிய தீச்சுடர் மேலெழும்
ஜாம் போத்தல் விளக்கது கூட
எரிபொருள் தடைக்கொரு சவாலென ஆகும்!
கூவி வரும் எறிகணைக்கும் - விமானம்
ஏவி விடும் குண்டுக்கும் மறைவிடம் தேடி
மண்ணுக்குள் புகுந்து விடும் மக்கள்
மீண்டும் தலை நிமிர்வர் புழுதியைத் துடைத்து!
தமிழர் நாட்டை வெல்வதும் எளிதோ!

- இளையவன்

# மலேரியாவில் இருந்து என்னை பாதுகாத்துக் கொள்ள முடியுமா ?

இன்று யாழ்ப்பாணத்தில் திடீரென விரைவாக பரவிவருகின்ற மலேரியா நோயினால் அனேகம் பேர் தமது நாளாந்த அலுவல்களைச் செய்ய முடியாமல் இருப்பதுடன் நாளாந்த பிழைப்பில் தங்கியுள்ள அனேக குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டும் வருகின்றனர். இதைவிட இதற்கு சரியான முறையில் உரிய நேரத்தில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு கொடுத்து வராததால் அனேகம் பேர் இதனால் இறக்க வேண்டியும் வருகின்றது.

ஆரம்பத்தில் வடபகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, புளியங்குளம், வவுனியா ஆகிய பகுதிகளிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு ஆதாவது நாகர்கோவில், அம்பன், குடத்தனை, செம்பியன்பற்று பகுதிகளிலும் மற்றும் பளை, வரணி, இளாலி, அரியாலை, மணியன் தோட்டம், நாவாந்துறை, கந்தரோடை பகுதிகளிலும் காணப்பட்ட சிறிதளவான மலேரியா இன்று காலநிலையில் ஏற்பட்ட, மலேரியாவின் நோய்க்காவியான நுளம்பின் பெருக்கத்திற்கு சாதகமான சில மாற்றங்களாலும், போர்ச்சூழ் நிலைகளினால் மந்தநிலையடைந்த கட்டுப்பாட்டு முறைகளினாலும் யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதாக பரவலாக இந்நோய் பரம்ப காரணமாக அமைந்து விட்டன.

யாழ்ப்பாணத்தில் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (Plasmodium vivax), பிளாஸ்மோடியம் பல்சிபாரம் (Plasmodium Falciporam) எனப்படுகின்ற இரண்டுவகை ஒட்டுண்ணிகளின் தாக்கத்தினால் மனிதனில் மலேரியா நோய் தோற்றுவிக்கப்படுகின்றது. இவ்வொட்டுண்ணியானது அனோபிலின் (Anopheline) இன பெண் நுளம்பினால் ஒருவரில் இருந்து இன்னும் ஒருவரிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அதாவது ஒரு நுளம்பானது நோயாளியைக் கடித்து குருதியை உள்ளெடுக்கும் போது அங்கேயுள்ள ஒட்டுண்ணியும் அதனுடன் செல்லுகின்றது இவ்வாறு நுளம்பினை அடைந்த ஒட்டுண்ணி அதன் இரப்பையில் சில மாற்றங்களிற்குட்பட்டு 9—12நாட்களில் இன்னொருவரிற்கு தொற்றுகின்ற நிலையை அடைந்துவிடுகின்றது. அந்த நுளம்பானது இன்னுமொரு சுகதேகிக்குகடிக்கும் போது அவருள் அவ்வொட்டுண்ணிசென்றடைந்து விடுகின்றது. இவ்வாறு குருதியைச்சென்றடையும் ஒட்டுண்ணியானது அரைமணி நேரத்துள் ஈரல் கலங்களை அடையும், அங்கே பல மாற்றங்களிற்குட்பட்டு ஈற்றில் ஈரல் கலங்களை உடைத்துக்கொண்டு திருப்பவும் குருதியை வந்தடைகின்றது. இவ்வாறு குருதியில் செங்குழியங்களை தாக்குகின்றபோதே மனிதனில் மலேரியாவிற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்குகின்றது. இவ்வாறு ஈரலில் நடைபெறும் மாற்றங்களிற்கு 6—16 நாட்கள் வரை எடுக்கின்றது எனவே ஒரு நுளம்பானது மனிதனை தாக்கி 6—16 நாட்களின் பின்னரே அவரில் மலேரியா நோயினை தோற்றுவிக்க முடியும்.

விசேசமாககர்ப்பிணித்தாய்மாரினதும், சிறுபிள்ளைகளினதும் உடலின் நோய் எதிர்ப்புத்தன்மை குறைவாக காணப்படுவதனால் அவர்களிற்கு இலகுவில் இந்நோய் ஏற்பட்டு விடுகின்றது. அத்துடன் கர்ப்பிணித்தாய்மாரை இந்நோய் தாக்கும்போது அதன் தாக்கத்தினால் பிரசவத்தில் கஷ்டம், பிள்ளை இறந்துபிறத்தல், பிள்ளையின் நிறை குறைதல், அத்துடன் தாய் மரணமும் சம்பவிக்கலாம்; தாயிலிருந்து வயிற்றிலுள்ள சிசுவிற்கு இந்நோய் பரவ சந்தர்ப்பமுண்டு அவ்வாறு சென்றால் சிசு கருவினுள்ளேயே மரிக்க நேரிடுகிறது: அத்துடன் இவ்வொட்டுண்ணி அனேக செங்குழியங்களை தாக்கி அழிப்பதனால் குருதிச்சோகையும் உருவாகின்றது. இதைவிட ஈரல் சிறுநீரகம் நுரையீரல் போன்றவற்றில் அளர்ச்சி ஏற்படவும் இது காரணமாக அமைகின்றது சிறுபிள்ளைகளில் இந்நோயின் தாக்கத்தினால் உடலில் சாதாரணமாக பாதிப்பினை ஏற்படுத்தாத வேறு பல பக்ரீரியா போன்ற ஒட்டுண்ணிகள் குருதியினை சென்றடைவதால்செப்ரிசீமியா உருவாகவும் ஏதுவாகின்றது.

இந்த நிலைமையில் மக்கள் மத்தியில் மலேரியா என்னும் ஒரு புதிய பீதி உருவாகியுள்ளது; அதாவது இதிலிருந்து எப்படி எம்மை பாதுகாத்து கொள்வது என்பதாகும்,

>>>>>>>>>>>>

சொலமன் - ச.

(3ஆம் வருட மருத்துவ மாணவன்)

<<<<<<<<<<<<

இன்று எமது சூழலானது பெருமளவில் மாற்றமடைந்து நுளம்பின் பெருக்கத்திற்கு சாதகமாக இருப்பதனாலும் இப்போது நிலவுகின்ற காலநிலை அதற்கு ஏற்றதாக அமைந்துள்ளதனாலும் அதன் பெருக்கம் பெரிதளவில் அதிகரித்துள்ளது; அத்துடன் ஒரு தனிமனிதனால் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி விட முடியாது தனது சூழலில் நுளம்பின் பெருக்கத்தை அவர் கட்டுப்படுத்தினாலும் ஒரு நுளம்பானது பத்து, பன்னிரண்டு கிலோ மீற்றர்கள் கூட மனிதனின் குருதியினை தேடி வரக்கூடியதாக இருப்பதனாலும் அவரால் நுளம்பில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள முடிவதில்லை. இருந்தாலும் வீட்டினை நன்கு துப்பரவாகவும் படுக்கை அறையினை ஒழுங்காகவும் ஏன் நுளம்புவலை, நுளம்புத்திரி முதலியன பாவித்து வீட்டில் தான் பாதுகாப்பு பெற்றுக்கொண்டாலும் அவர் வெளிஇடங்களிற்கு செல்லும் போதாவது நுளம்பின் தாக்கத்திற்கு உட்பட வேண்டி நேருகின்றது எனவே இந்நிலையில் எப்படி நான் மலேரியாவிலிருந்து பாதுகாப்பு பெறலாம் என்ற கேள்வி எழும்பலாம்,

இந்நிலையில் இதேபோன்ற திடீரென பெரிய அளவில் பரவிய மலேரியாவில் இருந்து பாதுகாத்துக்கொள்ள அனேக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு பெருமளவில் வெற்றியளித்த; அத்துடன் வேறு அனேக இடங்களில் தற்பொழுதும் நடைமுறையில் உள்ள ஒரு கீமோபுரபிலக்சிஸ் (Chemoprophylaxis) என அழைக்கப்படும் தொடர்ச்சியான சிகிச்சைமுறை ஒன்றினை கையாள்வதால் நாம் மலேரியாவில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். இதற்காக யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் குளோரக்குயின் (Chloroquine) என சாதாரணமாக மலேரியாவிற்கு உபயோகப்படுத்தும் மருந்தினையே உபயோகிக்கலாம்; அதாவது இம்மருந்தினை தொடர்ச்சியாக குறைந்த அளவில் யாழ்ப்பாணத்தில் மலேரியாவின் தாக்கம் தணியும்வரை எடுப்பதாகும். இதற்காக கீழ்க்காணும் அளவில் குளோரக்குயினை உபயோகிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 0-5 கிழமை | | 30mg | (¼குளிகை) |
| 6 கிழமை—11 மாதம் | | 75mg | (பாதி ,, ) |
| 1-5 வயது | (10-20கி.கி.) | 150mg | (1 ,, ) |
| 6-12 ,, | (20-40) ,, | 225mg | 1 1/2 ,, ) |
| 12 ற்கு மேல் | (40kg மேல்) | 300mg | (2 ,, ) |

இந்த விதத்தில் கிழமைக்கு ஒருதடவை தொடர்ச்சியாக எடுத்து வரும்போது உடலிற்கு எதுவித பக்க விளைவுகளுமின்றி மலேரியாவில்இருந்து பாதுகாப்பும் பெறலாம்;

அத்துடன் ஒருவர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு சரியான முறையில் முழுமையாக சிகிச்சை பெறாதுவிடின் சிலகாலங்களின்பின் நுளம்பினால் தாக்கப்படாமலே திரும்பவும் மலேரியாவினால் பாதிக்கப்படவேண்டி நேரிடலாம். அதாவது எமது உடலில் தொற்றும் மலேரியா ஒட்டுண்ணியானது குருதி, மற்றும் ஈரல் கலங்களிலும் பரவிக் காணப்படும். எமது சாதாரண சிகிச்சையின்போது எடுக்கும் குளோரக்குயின் ஆனது குருதியில் உள்ள ஒட்டுண்ணியையே கொல்லக் கூடியது; எனவே மலேரியாவினால் தாக்கப்பட்ட ஒருவர் குளோரகுயினை ஒரு முழு அளவில் எடுக்கும்போது அவர் மலேரியாவில் இருந்து குணமடைவார். ஆனால் பின்னர் சிலகாலங்களின் பின் ஈரலில் உள்ள ஒட்டுண்ணி திரும்பவும் குருதியை அடையும்போது மீண்டும் ஒருமுறை மலேரியாவினால் பாதிக்கப்படவேண்டி ஏற்படும். இதற்காகவே குளோரகுயினுடன் சேர்த்து மண்ணிறமான ஒரு சிறிய மாத்திரை பிரிமக்குயின் (Primaquine) கொடுக்கப்படுகின்றது; இது மனிதனின் ஈரலில் உள்ள ஒட்டுண்ணியையும் கொல்லக்கூடியது. எனவே மலேரியாவினால் பாதிக்கப்பட்ட ஒருவர் காய்ச்சல் தணிந்தவுடன் மிகுதி குளிசைகளை கொடுக்காமல் சிகிச்சையை நிறுத்துவதனாலும், பிரிமக்குயினை கவனயீனமாக கொடுக்காமல் விடுவதனாலும் மீண்டுமொருமுறை தனக்குத் தானே மலேரியா ஏற்படக் காரணமாக அமைந்து விடுகின்றார்;

எனவே தற்பொழுது சிறிய அளவில் ஒரு ஆட்கொல்லி நோயாக மாறிவரும் இம்மலேரியா பற்றி நாம் கவலையீனமாக இருந்து விடாமல் இயலுமானவரை நுளம்புக்கட்டுப்பாட்டு முறைகளை கையாள்வதாலும், அத்துடன் சுயமான பாதுகாப்பு சிகிச்சை முறைகளை கைக்கொள்வதனாலும் நாம் இம்மலேரியாவின் தாக்கத்தைக் குறைப்பதில் உதவுவோமாக;

## தென் மாகாணசபைத் தேர்தல்

# ஐ.தே.கட்சி வென்றால் என்ன? தோற்றால் என்ன?

# வடக்கில் நடக்கப்போவது பெரும் யுத்தமே!

ஒரு பொதுத் தேர்தலுக்கு ஒப்பானதாகவும் பரபரப்பானதாகவும் காணப்படும் தென்மாகாண சபைக்கான தேர்தல் முடிவுகள் அநேகமாக தற்பொழுது வெளிவந்திருக்கும் அல்லது வெளிவந்து கொண்டிருக்கும் இதன் பிரகாரம் வெற்றியாருக்கு என்பதும் பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும்.

இம்மாகாண சபைத் தேர்தல் சிறிலங்காவின் அரசியல் எதிர்காலத்தை மட்டுமல்ல, குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான டி பி விஜேதுங்காவினதும், மேல்மாகாண சபை முதலமைச்சரான சந்திரிகா குமாரணதுங்காவினதும் அரசியல் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாகவும் இருக்கும் என்பது அரசியல் விமர்சகர்களின் பொதுவான கருத்தாகும். இவை ஏற்புடையவையும் கூட. இதனை இத்தேர்தலுக்கு அரசியல் கட்சிகள், அதன்தலைவர்கள், பத்திரிகைகள் கொடுத்த முக்கியத்துவத்தில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும்.

பிரேமதாசாவின் திடீர் மறைவினால், பதவிக்கு வந்த டி. பி விஜேதுங்காவின் கடந்த பத்து மாத ஆட்சியையும் அவரது கொள்கை தொடர்பாகவும் சிங்கள மக்கள் என்ன கருதுகின்றார்கள் என்பதற்கு ஒரு பரிசோதனைக் களமாக இத்தேர்தல் அமையும்.

இத்தேர்தல் பிரசாரத்தில் டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாடு, சிறுபான்மையினருக்கு எதிரானதாக, குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரானதாகவே இருந்தது. அவர் தங்காலையில், இடம்பெற்ற இறுதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும் போது "விடுதலைப்புலிகள் தொடர்பாக நான் கொண்ட கொள்கையை முன்னெடுத்துச்செல்வதற்கும், விடுதலைப் புலிகளுக்கு மேலும் ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கும் எனக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைத்தாருங்கள்" என சிங்கள மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரே, அரசாங்கத்தின் அராஜகம், மோசடிகள், மனித உரிமை மீறல்கள் என்பனவற்றையே பிரதான அம்சமாகக் கொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தென்மாகாணத்தில் இதுவரையில் பத்திரிகைகள் மற்றும் நிறுவனங்கள் நடத்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற வேண்டும் ஆனால், தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் தற்பொழுது கிடைத்து விடத்தொடங்கியிருக்குமாகையால் அதைப்பற்றிப்பேசத் தேவையில்லை

ஆனாலும், கருத்துக் கணிப்பின் படியே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெறுமானால், அக்கட்சியின் பிரதான கோரிக்கையாக இருக்கப்போவது, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பதவிவிலக வேண்டும் என்பதும், பாராளுமன்றப் பொதுத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதாகவே இருக்கும்.

இதற்கு ஏற்றால் போல், "உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்தத் தவறினால் பொதுமக்களின் துணை கொண்டு தெருவில் இறங்கிப் போராடுவேன்' என சிறிமாவோ பண்டாரநாயக்க ஏற்கனவே அறிவித்துள்ளார். ஆகையினால் தென்மாகாண சபையில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிபெற்றால், ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்தவேண்டும் என்றும், மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள் எனக் கூறுவதோடு பதவி விலகுமாறு கோரி ஊர்வலங்கள் கூட்டங்கள் எனப் போராட்டங்களை நடத்தவும் கூடும்;

சுதந்திரக்கட்சியினர் இத்தேர்தலில் தாம் வெற்றிபெறுவோம் என்பதில் பெரும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். சுதந்திரக் கட்சியைப் பொறுத்து 1956ஆம் ஆண்டில் இருந்ததுபோன்று தமக்குஒரு ஆதரவுஅலை வீசுவதாக அவர்கள் தரப்பில் நம்பப்படுகின்றது. ஆனால், தேர்தல் தோல்வியில் முடியுமானால் சுதந்திரக்கட்சியைப் பொறுத்து அதுவிபரீதமானதாக ஆகிவிடும் என்பதில் சந்தேகமே தேவையில்லை

தேர்தலில் சுதந்திரக்கட்சி தோல்வியுறுமானால் தேர்தல் முடிவுகளை சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ள மாட்டாது. 'தேர்தல் மோசடி' என அறிவித்துவிட்டு அரசிற்கு எதிரான கூட்டங்களை நடத்தக் கூடும் என்பதோடு சட்ட நடவடிக்கைஎன்ற ரீதியில் நீதிமன்றம் செல்லக் கூடும், ஆனால் தேர்தல் தோல்வியின் பின்னர் இவற்றால் எத்தகைய நன்மையும் ஏற்படுமா? என்பது சந்தேகமே.

ஆனால் இத் தோல்வியானது தான் இறக்கும் முன் ஜனாதிபதி பதவியை ஒரு முறையாவது பிடித்துவிட வேண்டும் என்ற சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கனவை இதுகலைந்துவிடும். இதேவேளைஎதிர்காலச்சுதந்திரக் கட்சியின் தலைவியும்நம்பிக்கை நட்சத்திரமுமான சந்திரிகாகுமாரணதுங்க வின் அரசியல் எதிர்காலத்தில் பெரும் தடங்கல்களும் விழக் கூடும் அவரதுமேல்மாகாணசபைத்தலைவர் பதவி கூடப் பறிபோகலாம்

**சிறிலங்காவின் அரசினதும் ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியவற்றினதும் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போவதாகக் கருதப்படும் தென்மாகாணசபை தேர்தலில் இக் கட்சிகளில் எவை வெற்றிபெறினும் டி.பி. விஜேதுங்கா வடக்கில் நடத்தப்போவது பெரும் யுத்தமே.**

அத்தோடு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டு சிதைந்து போகலாம். ஏன் சிலவேளை சுதந்திரக்கட்சியே உடைந்தும் போகலாம். சுதந்திரக்கட்சியில் உள்ள பௌத்த - சிங்கள அடிப்படைவாதிகள், அனுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்கள் கட்சியைவிட்டு உடைத்துச் செல்லக் கூடும் மீண்டும் எழுபதுகளின் பிற்பகுதி போல் கட்சி பெரும் நெருக்கடியில் சிக்கித் தவிக்க வேண்டி வரலாம்.

இதேவேளை அரசியல் விமர்சகர்கள் கருத்துக் கணிப்புக்கள் என்பனவற்றிற்கு மாறாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெறுமாயின் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இவ்வெற்றி தனது தனிப்பட்ட வெற்றி என்றும், தனது கொள்கைக்குகிடைக்கப்பெற்ற அங்கீகாரம் என்றும் பறைசாற்றிக் கொள்வார். எதிர்க்கட்சிகள் மக்களினால் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிப்பார். இந்த வாதம் பலருக்கு ஏற்புடையதாகக்கூட இருக்கலாம்.

மேலும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விரைவிலேயே பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கு அவர் முனையக் கூடும்.

அத்தோடு தேர்தலின் வெற்றியானது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் எனக்கூறிக் கொள்வார். இதனை அவரது மொழியில் கூறுவதானால் 'பயங்கரவாதத்தை அழிக்க சிங்கள மக்களினால் அளிக்கப்பட்ட அங்கீகாரம்' என்று கூறப்படும்

இதைத் தொடர்ந்து வடக்கில் பெரும் தாக்குதலுக்கு டி. பி விஜேயதுங்கா உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம் இப்படையெடுப்பானது விரைவானதாகவும் பெரும் வெற்றியெனப் பறைசாற்றக்கூடியதுமாக இருக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருக்கும் இவ்வெற்றியின் மூலம் தன்னைசிங்களபேரினவாதத்தின்தலைவன் என டி பி விஜேயதுங்கா தன்னை நிலைநிறுத்த முற்படுவார் அதைத் தொடர்ந்துஎழும்சிங்களதேசிய அலையில்அடுத்தஜனாதிபதித் தேர்தலையும் டி.பி பொதுத்தேர்தலையும் எதிர்கொள்ளதயாராவார்.

இதேவேளை தமது கட்சிக்குள் உள்ள தனக்கு எதிரான சக்திகளை பலவீனப்படுத்தவும், தேவையாயின் களை எடுக்கவும் டி பி விஜேதுங்கா முனைவார்என்பதிலும்சந்தேகமில்லை அத்தோடுதனது அணியைப் பலப்படுத்தவும்முற்படுவார்

இதன் பிரகாரம் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் கட்சியில் முக்கிய பங்கு வகித்த பலர் இன்னமும் ஓரம் கட்டப்படலாம். உள்வரவுகளான காமினி திசநாயக்கா டீமெல்போன்றவர்களின் கை பலப்படுத்தப்படலாம் அமைச்சர்பதவிகள்அவர்களுக்கு வழங்கப்படுவதும் எவராலும் தடுக்க முடியாத ஒன்றாகப் போகலாம். மேலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்தும்குறிப்பாக, பண்டாரநாயக்கா குடும்பத்தில் இருந்து சுனேத்திராா ரூபசிங்காபோன்ற ஓரிருவரை மேலும்அரவணைக்க முயலவும் கூடும்.

ஆனால் வடக்கில் பெரும் போர் ஒன்றை நடத்திய கையுடன் வடக்கு கிழக்கு உள்ளடங்கிய ஒரு ஜனாதிபதித்தேர்தலை அவரால் நடத்தக் கூடிய ஒரு அரசியற் சூழ்நிலை வடக்கு-கிழக்கில் நிலவுமா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும். அது டி பி விஜேதுங்காவிற்கு சில தடைகளை ஏற்படுத்தக்கூடும்.

இச்சிக்கல்கள் அரசியலமைப்புச் சட்டத்துடன் கூடியதாக உருவாகும் ஆகையால் இலகுவில் தீர்க்க கூடியதாக இருக்கப்போவதில்லை, அதிலும் தேர்தலில்தோல்வியுற்றநிலையில் இருக்கும் சுதந்திரக்கட்சி டி.பி,க்கு ஒரு போதும் ஒத்துழைக்கப்போவதில்லை.

இந்நிலையில் டி. பி விஜேதுங்கா புதிய மார்க்கம் எதைக்கைக்கொள்வார் என்பது அரசியலில் முக்கிய முடிவு ஒன்றாக இருக்கும். அதை தற்பொழுது அறுதியிட்டுக் கூற முடியாது.

ஆனால் அரசியற் கணிப்பீடுகள் சரியாகி ஐக்கிய தேசியக் கட்சியானது தேர்தலில் தோற்கடிக்கப்படுமானால். அது ஐ தே கவின் தோல்வி என்பதைவிட டி- பி-விஜேதுங்காவின் தோல்வி என்பதாகவே கொள்ளப்படும். இது டி- பி- யின் அரசியல் எதிர் காலத்தையே பெரிய சர்ச்சைக்குரியதாக்கிவிடும்

தோல்வியைத் தொடர்ந்து எழும் எதிரணியினரின் அழுத்தம் பொதுத் தேர்தலுக்கும் ஜனாதிபதித் தேர்தலையும் நடாத்துமாறு அதிகரிக்கும் அதேவேளை உள்ளிருந்து அதாவது கட்சிக்குள்ளேயே டி. பி. விஜேதுங்காவிற்கு எதிரான குரல்கள் பலமாக எழும்பத் தொடங்கிவிடும்

ஏற்கனவே டி பி. விஜேதுங்கா கட்சிக்குள் கடைப்பிடிக்கும் கொள்கைபற்றி பலமாக அபிப்பிராய பேதங்கள் உண்டு. காமினி, அநுரா, ரொனிடிமல் போன்றவர்களின் இணைப்பும், பிரேமதாசா ஆதரவாளர்கள் ஓரம்கட்டப்பட்டமை தொடர்பாகவும் பலத்த முரண்பாடுகள் உள்ளது. அத்தோடு, இனவாதத்தை வெளிப்படையாகவே அரசியல் மூலதனமாக்கும் அவரது கொள்கையும் தற்பொழுது வெளியில் பெரும் பிரஸ்தாபத்திற்கு உள்ளாகியுள்ளது. தேர்தலில் தோல்விகிட்டுமானால் இதுவும் உள்ளுக்குள் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு அம்சமாகவே மாறலாம்.

இந்நிலையில், ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவிற்கு தெரிவிற்கென பல மார்க்கங்கள் இருக்கப் போவதில்லை வடக்கில் பெரும் படை எடுப்புக்களை நடத்தி மக்களினதும் அரசியல்வாதிகளினதும், சிங்கள பத்திரிகைகளினதும் கவனத்தைத் திருப்புவதைத் தவிர வேறுவழி எதுவும் அவருக்கு இருப்பதற்கான வாய்ப்பு இல்லை இதன் மூலம், சிங்களத் தேசிய வாதத்தைத் தட்டி எழுப்புவதுடன், தேர்தல் பக்கம் இருக்கும் சிங்கள அரசியல் கட்சிகளின் கவனத்தையும் திசை திரும்ப அவர் முயலக் கூடும்

அதாவது இன்று வெளிவரும் தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் சிறிலங்காவினதும், அதன் இரு பெரும் அரசியற்கட்சிகளினதும் அதன் தலைமைத்துவத்தினதும் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பவையாக அமையப் போவது எத் தகைய அரசியல் யதார்த்தமானதோ, அதே போல் வடக்கு-கிழக்கை அதாவது தமிழ் மக்களைப் பொறுத்து தேர்தலின் எம் முடிவும் அதாவது ஐ.தே. கட்சி தோற்றால் என்ன? வென்றால் என்ன அது யுத்தத்தைத் தவிர்க்க உதவப் போவதில்லை என்பதும் நிதர்சனமாகவே உள்ளது.

**ஜெயராஜ்**

## உடன் தேவை

**பண்ணை பராமரிப்பாளர்**

கோழிப் பண்ணை பராமரிப்பாளர்
ஐந்து வருடங்களிற்கு மேல்
அனுபவமுள்ளவர்கள் 28-03-94
திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு
அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்;

**சுவையருவி கோழிப்பண்ணை,**
**மின் நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ-8903)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

அரச அதிபரினால் நோயாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு 29 ஆம் திகதி அன்று புறப்படவிருந்த "நரோமா" கப்பல் 26 ஆம் திகதி அன்று புறப்படவிருப்பதாக யாழ் பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். எனவே தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களை இரண்டு நாட்களுக்குத்தேவையான உணவு தண்ணீருடன் 26-03-94 அன்று பருத்தித்துறையிலுள்ள துறைமுகத்திற்குச் செல்லும்படி பணிப்பாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக ஆண்டு பங்குனி மாதம் 27 - 03 - 1994 ஞாயிற்றுக்கிழமை பகல் 11-15 — 12 - 30 வரை வரும் மிதுனலக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **சின்னத்தம்பி சுந்தரலிங்கம்** | **குணரட்ணம் ராஜேஸ்வரி** |
| (காந்தி) | (லவா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறையருள் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று கொக்குவில் மேற்கு, தாவடி வேம்படி முருகன் ஆலயத்தில் திருமணம் நடைபெற இருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் சுற்றம் சூழ வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து, மணமகன் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

28 - 03 - 1994 பிற்பகல் 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்

தனிப்பட்ட அழைப்பிதழ் தர முடியாததற்கு வருந்துகின்றோம்,

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;
**செல்வம்ஸ் மற்றறி**
(உரிமையாளர்)
தாவடி தெற்கு கொக்குவில்.

(7841)

மானிப்பாய் கோ. ப. வர்த்தகர் சங்க வளர்ச்சி

## நிதியுதவிக் கலைநிகழ்ச்சிகள்



### ○ பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினமும் மாணவர்களும் இணைந்து வழங்கும் வீரதீரச்செயல்கள்

- நெருப்பு புதைகுழியில் சிலமணி நேரம் படுத்திருத்தல்
- இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக உடலில் ஏற்றுதல்
- அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
- ஓடும் வாகனத்தை தொண்டையால் இழுத்தல்
- 35Kg நிறையுடைய குண்டை 7 அடி உயரத்தில் இருந்து உடலில் ஏந்துதல்
- பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல்வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
- 3" 200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கைக்குமேலாகப் படுத்து மார்பின்மேலாக பாரமுடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்
- துரைரத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

### ○ தமிழீழ இசைக் குழுவினரின் தமிழீழ எழுச்சிக்கீதங்கள்

**இடம்:** மானிப்பாய் மாவீரர் கலையரங்கம்
**காலம்:** 27-03-94 ஞாயிறு மாலை 7.00 மணி

**அன்பளிப்பு: 150/- 100/- 50/-**

- நிர்வாகம்

விளம்பர அன்பளிப்பு:
சகல மின் உபகரணங்களையும் மலிவாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
**சுந்தர்சன்ஸ்**
மத்திய சந்தை, மானிப்பாய். (இ-8898)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் தா. தமிழவன்
### 25 - 03 - 1994

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த குணம் ஐயா - சதானந்தி தம்பதிகளின் ஒரே செல்வப் புதல்வன் தமிழவன் தனது 2-வது பிறந்த நாளில் தனது குட்டி அக்காமார், குட்டித் தங்கச்சிமாருடன் அகமகிழ்கின்றார். அவரை பெரிய மாமா குடும்பம், அப்பா, அம்மா, பாட்டி எல்லோரும் சகல கலைகளையும் கற்று செயல் வீரனாகத் திகழ வாழ்த்துகின்றனர்,

(7842)

## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வி றஜீதினி

இராயேஸ்வரன் கௌரி தம்பதிகளின் செல்லப் புதல்வி செல்வி றஜீதினி தனது இரண்டாவது பிறந்த நாளை கனடாவில் 25-3-94-இல் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

அவளை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மாமன்மார், மாமிமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் திருவருளால் சீரும் சிறப்புடனும் சகலகலா வல்லியாக வாழ வேண்டும் என வாழ்த்துகிறார்கள்.

175, Donmill Road,
A P.T. 1901 TL
Donomills ONT.
Canada

க. நடராசா
நவாலி

(7833)

## அறிவித்தல்

**மருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபை**

மேற்படி சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 09-02-1994 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்:- | டாக்டர். எஸ் கதிரவேல்பிள்ளை |
| உப தலைவர்:- | டாக்டர். ஆர். குழந்தைவடிவேல் |
| செயலாளர்:- | திரு. வி. சேதுநாயகம் |
| உபசெயலாளர்:- | திரு. எஸ். செவ்வந்திநாதர் |
| பொருளாளர்;- | திரு. கே. பாலசுந்தரம் |

செயற்குழு உறுப்பினர்கள்:-

| | |
|---|---|
| திரு. ஆர் பாலகிருஷ்ணன் | திரு. வி. சிவராஜா |
| திரு. வி. எம். தேவராஜன் | திருமதி. பி. பரஞ்சோதி |
| திரு. ஏ. வி. தங்கராசா | திரு. எஸ். கதிர்காமத்தம்பி |
| திரு. எஸ். அருணகிரி | திரு. பி. இராதாகிருஷ்ணன் |
| திரு. ஜி பத்மநாதன் | திரு. ஏ. தவராசா |
| டாக்டர் எம்- யோகீஸ்வரதேவன் | |
| திரு. என். அனந்தராஜ் | |

புதிய செயற்குழுவின் தீர்மானத்தின்படி இவ்வறிவித்தல் வெளியிடப்படுகிறது.

நன்றி.

**டாக்டர் எஸ், கதிரவேல்பிள்ளை**
தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியும்
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

(இ-8902)

# அரசியல்வாதிகளை துரோகிகளென மக்கள் ஒதுக்கி வைக்க வேண்டும்

-அத்தாவுட செனவிரட்ணா

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் வேற்றுமைக்கான விதை அரசியல் வாதிகளால் விதைக்கப்பட்டது. இப்பேற்பட்ட அரசியல் வாதிகளைத் தேசத்துரோகிகள் என்று ஒதுக்கி வைக்கவேண்டும்; சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் நாட்டில் உண்டாக வேண்டுமானால் மக்கள் இவர்களை ஏற்கக் கூடாது. பொறுப்பற்ற அரசியல் வாதிகளின் பேச்சுகளால் தான் முன்பு நாட்டில் இனக் கலவரம் ஏற்பட்டது. அவர்களில் சிலர் இப்போது அரசியல் அரங்கில் இருந்து மறைந்து விட்டார்கள். மற்றவர்களும் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்-இவ்வாறு அத்தாவுட செனவிரட்ணா தெரிவித்தார்.

கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான அத்தாவுட செனவிரட்ணா தெரணியாகலையில் தோட்டத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 1983 இனக் கலவரங்களின் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல், சில அரசியல் வாதிகள் சிங்களவரின் ஆதரவைச் சம்பாதிப்பதற்காக மேடையில் நின்று இனவாதம் பேசுகிறார்கள். 1983க்குப் பிறகு இனங்களுக்கிடையிலான சமநிலை குலைந்து போய் விட்டது. இதற்குக் காரணம் யார்? சாதாரண மக்கள் அல்லர். எதிலும் திருப்திப் படாத அரசியல் வாதிகளே இதற்குக் காரணம் என்றார்.

## 800 பீப்பா தார் எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 800 பீப்பா தார் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்தியதை அடுத்தே இந்த 800 பீப்பா தாரினை வழங்க வீதி அபிவிருத்தி அதிகார சபை இணங்கியுள்ளது. இதேவேளை இவற்றை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான அனுமதியும் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீதிகளை புனரமைப்பதற்கு இந்தத் தார் பயன்படுத்தப்படவுள்ளது.

ஆயினும் மேலதிகமாக பல பீப்பா தார் எடுத்துவரப் படாது விடில் வீதிகளைத் முற்றாகப் புனரமைக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (தி) (கி)

## நரோமா பயணிகள் பருத்தித்துறைக்கு வரவும்

நரோமா கப்பலில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் நாளை காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு தவறாது சமுகம் தரும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

போதனா வைத்தியசாலை பணிப்பாளரினால் கொழும்பிற்கு அனுப்பப்படவிருக்கும் நோயாளரும் நாளை இதே நேரம் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது இவ்வாறிருக்க 29ஆம் திகதி 2-வது பட்டியலில் பெயர் பதியப்பட்டவர்கள் அன்றைய தினம் பிரயாணம் செய்யமுடியாது என்றும் அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி), கி)

### திருவாளர்

படுத்திய தாங்கள் இப்போது தான் தலைமைத்துவத்தின் ஆற்றல் குறித்த ஒரு நிலைப்பாட்டை போராட்டத்தின் நியாயத் தன்மையை சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தெளிவாக முன்வைத்து இருக்கிறீர்கள். இப்போதாவது இதை உணர்ந்து கொண்டிருக்கின்றமையை பாராட்டும் அதேவேளை தமிழீழம் தனியரசாக உதயமாவது மட்டுமே இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதையும் நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை உருவாகியே தீரும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனினும் வண்டிக்கு முன்பாக மாட்டைக் கட்டினால் மட்டுமே வண்டி முன்நோக்கி நகரும் என்பதைப்போல, எதிர்கால நிகழ்ச்சிகள் தொடர்பாக தொலை நோக்குடன் பார்க்க கூடிய ஆற்றல் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான உங்களிடம் இல்லாது போக நியாயமில்லை. இருப்பினும் உங்கள் கொள்கை உங்கள் தேசத்தின் நலன் என்ற வரம்பிற்குள் மட்டும் சிந்திக்கப்படுவதாயினும், போராடும் மக்களே வரலாற்றை நிர்ணயிப்பார்கள் என்பதில் நீங்கள் கருத்து முரண்பாடு கொள்வீர்களானால், எதிர்காலத்திலும் நீங்கள் தோற்றுப் போவீர்கள்.

- ஒரு தமிழீழக்குடிமகன்

### மயிலந்தனை

விளக்கமறியலில் உள்ள நிலையில் இவ்வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

மயிலந்தனைப் படுகொலைகள் 1992 ஆகஸ்ட் 9ஆம் திகதி நடைபெற்றது தெரிந்ததே.

### தேர்தலில்

இதேவேளை தென்மாகாண சபை தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஐ.தே. கட்சியை சேர்ந்த அமைச்சர்களான வீரசிங்க மல்லிமாராட்சி, றேனுகா ஹேரத், அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும் நேரடியாகச் சென்று அங்கு தேர்தல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உத்தியோகத்தர்களை உற்சாகப் படுத்தியதாக தெரியவந்துள்ளது.

### நியூயோர்க்

டது என்று விமர்சிக்கிறார் விப்பிள் என்பவர்

வெள்ளையர்களிடம் தன்னை மனிதனாக, சக மனிதனாக மதிக்க வேண்டும்என்ற கோரிக்கைக்காக கறுப்புமனிதன் தன் ஆபிரிக்கக் கலைக் கருவூலங்களை எல்லாம் காட்டிவாதாட வேண்டியிருக்கின்றது தனது மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒரு கருவியாக கலை இலக்கியத்தைப் பயன்படுத்தும் போது அவன் ஒருமெல்லிய கயிற்றின் மீது கரணம் தப்பினால் மரணம் என்கிற நிலையில் நடக்கிற அபாயம்தெரிகிறது

இதனால் ஹார்லம் மறுமலர்ச்சியின் மீது எவ்வளவுவிமர்சனங்கள் வைக்கப்பட்டாலும் அது கறுப்பு மனிதனுக்கு இலக்கிய உலகத்தின் கதவுகளைத் திறந்து விட்ட ஒரு முக்கிய எழுச்சி என்பதை மறுக்க முடிவதில்லைஅமெரிக்க மண்ணில் நீக்ரோ என்னும் தலித், தனது தலித் அடையாளத்துடனே யே அங்கீகாரம் பெற்ற இலக்கிய உலகத்தில் நுழைந்து சரியாசனம் பெற ஹார்லம் மறுமலர்ச்சி ஊற்றுக்கண்ணாய் இருந்ததை யாரும் மறுக்கமுடிவதில்லை

நன்றி: சுபமங்களா

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 23-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 1390

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

42-3339, 42-3267, 26-9992, 28-1110, 27-5744, 26-3582, 42-9326, 41-9855, 40-9055, 42-8114, 27-5775, 27-2020, 28-1085, 28-5484, 26-2296,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-1857, 24-5679, 27-5482, 43-4045, 27-3910, 41-7693, 42-3726, 28-1925, 26-6361, 26-0032, 43-6974, 26-6199, 26-1609, 26-3722, 28-0429, 28-0154, 26-3937, 24-1040, 26-3410.

### 24-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1409

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2524, 22-7862, 24-4303, 26-2786, 26-8223, 24-4465, 28-2089, 26-0852, 27-5535, 26-3390.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-6821, 24-8631, 27-4920, 26-3336, 26-4885, 26-0786, 26-3812, 26-5244, 26-8789, 42-2157, 27-4239, 24-5623, 24-1172, 26-4501, 41-9663, 26-6029, 26-5760, 28-5039, 26-5202, 27-5845, 28-5366, 24-0878.

## மக்கள்வங்கி ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் உள்ள எழுதுவினைஞர் மற்றும் சுருக்கெழுத்தாளர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 2ஆம் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் சுமார் 19 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி சுருக்கெழுத்தாளர்களுக்கு விண்ணப்பித்தோருக்கும 3ஆம் திகதி எழுதுவினைஞர்களுக்கு விண்ணப்பித்தோருக்குமான பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சையில் சுமார் 2775 பேர் எழுதுவினைஞர்களுக்கும் 256 பேர் சுருக்கெழுத்தாளர்களுக்கும் விண்ணப்பித்துள்ளனர்.

மேலும் இவ்விரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித்திணைக்களம்தெரிவித்துள்ளது. (பா)

முதலாம் தவணைப் பரீட்சை

## அந்தந்த பாடசாலைகளே வினாக்கள் தயாரிக்க வேண்டும்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டப் பாடசாலைகள், அந்தந்தப் பாடசாலைகளில் பாட ஆசிரியராலேயே தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களைக் கொண்டு முதலாம் தவணைப் பரீட்சை நடாத்தப்பட வேண்டும் என்று நல்லூர் -யாழ்ப்பாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களை பணித்துள்ளார் அவரால் அனுப்பப்பட்ட சுற்று நிருப்பத்தில் எக்காரணம் கொண்டும் வேறு பாடசாலை வினாத்தாள்களைப் பயன் படுத்தக் கூடாது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அதே வேளை நல்லூர் கோட்டத்தில் இரு பிரதான பாடசாலைகள் ஏற்கனவே செய்து கொண்ட ஒழுங்கின் படி ஒரே வினாத்தாள்களைக் கொண்டு பரீட்சை நடாத்துவதாகத் தெரிய வருகிறது.

கல்வி வலயம் இரண்டிலும் இதே மாதிரியான ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும் என்று பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. வலயம் இரண்டு கல்விக் கோட்டத்தில் பல பாடசாலைகள் சேர்ந்து கூட்டாக பரீட்சை நடாத்துவதற்காக ஏற்கனவே ரூபா ஒரு லட்சத்துக்கும் அதிகமான செலவில் அச்சிடப்பட்ட வினாத் தாள்கள் இந்த அறிவித்தலினால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதிபர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

யாழ். மாநகரசபையில்

## ஊழியர் பற்றாக்குறை; சுகாதார சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் ஊழியர் பற்றாக்குறை காரணமாகவே சிறப்பான சுகாதார சேவையை நடத்த முடியாமல் இருப்பதாக யாழ். மாநகரசபை வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

யாழ். மாநகர சபைக்கு சுமார் முந்நூறு நகர சுத்திகரிப்பு வடிகால் அமைப்புக்கு ஊழியர்கள் தேவையென்றும் ஆனால் தற்போது இதில் சரிபாதி தொழிலாளர்களே இருப்பதாகவும் எனவே குறைந்த ஊழியர்களை கொண்டு தினமும் அதிக வேலை பெறுவது முடியாத காரியம் என அவ்வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

ஊழியர்களின் நியமனத்திற்கு அதிகாரிகளின் அசமந்த போக்கே காரணம் என்பதை சுட்டிகாட்டியதுடன் தொடர்ந்து இந்நிலை ஏற்படுமாயின் யாழ். மாநகரசபையின் சூழல் சுகாதாரத்தில் மிக பாதகமான நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை சகல தரப்பினரின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது என்றும் இராணுவ நடவடிக்கை காரணமாக வடிகாலில் தடைப்படுவதினால் வடிகாலில் நீர் தேக்கங்கள் அடைவதாலும் இந்நிலை நுளம்பு வேகமாக பரவுவதற்கும் மற்றும் துர்நாற்றம் வீசுவதற்கு வழிவகுக்கின்றது என்றும் எனவே கழிவு நீர்களை ஒழுங்கமைப்பு செய்து அந்த அந்த வடிகால் ஊடாக செல்ல விடுமாறும் குறுகிய நோக்கத்திற்காக வேறு வடிகால்களின் கழிவு நீர்களை அனுப்புவதினால் இவ்வாறு சிரமம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை வாகன வசதிகள் அற்ற நிலையிலும் எமக்குரிய குறைந்த வளத்தை மையமாக கொண்டு குப்பை கூழங்கள் அகற்றப்பட்டு வருவதாகவும் இவற்றை புரிந்து கொள்ளாமல் தமது குப்பை கூழங்களை வீதி யோரங்களில் போடுவதால் பாரிய சுகாதார பாதிப்பு ஏற்படுவதாகவும் எனவே மாநகரசபையின் பூரண ஒத்துழைப்பு மற்றும் நிறுவனங்கள் பொது மக்களின் முழுமையான ஒத்துழைப்பின் நிமித்தமே மாநகர சபையின் சுகாதாரத்தை பேணமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மகாஜனா கல்லூரிக்கு 7,50,000 ரூபா

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு ஏழு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பணம் கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக கொட்டகைகள் மூலம் மாணவர்களின் இடப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.

சமீபகாலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மாணவர்களை உள்ளடக்கி கல்வி பயிற்றுவதற்கு இவை பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி.கி)

## தொலைக்கல்வி இறுதிப் பரீட்சை

இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி செயன்முறை இறுதிப் பரீட்சை நாளையும், நாளை மறுதினமும் நிலையத்தில் நடைபெறவுள்ளது ஆசிரியர் பயிற்சியாளர்கள் உரிய உபகரணங்களுடன் காலை 8.00 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# தமிழர்கள் படும் இன்னல்களை எமது மக்களுக்கு எடுத்துக்கூறுவேன்

**- யாழ் வந்த பிரான்ஸ் பத்திரிகையாளர்**

(வடமராட்சி)
பாரிஸ் நாட்டுக்கு நான் திரும்பிச் சென்றதும் இங்கு தமிழ் மக்கள் படும் இன்னல்கள் துன்பங்களை எமது பத்திரிகையின் மூலம் மக்களுக்குத் தெரிய வைப்பேன்.

பாரிஸ் நாட்டுப் பத்திரிகையாளர் லீமொண்ட் என்பவர் நேற்று யாழ் வருகை தந்திருந்த போது வடமராட்சி செய்தியாளருக்கு முன் கண்டவாறு பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார்.

அவர் அங்கு வைத்து மேலும் தெரிவிக்கும் போது, இங்குள்ள தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள் எங்களுக்கு ஓரளவு தெரிந்த போதிலும் அதை நேரில் காணும் வாய்ப்பு இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகள் துண்டிக்கப்பட்டு இருப்பதையும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இருந்து வருவதும் அறிந்து கொள்ள முடிகிறது.

இங்கு வந்த நான் இப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். அத்தோடு சம்பந்தப்பட்ட சிலருடன் தொடர்பு வைத்து நிலைமைகளை அறிந்து கொள்வேன்.

நான் இங்கே நாளை சனிக்கிழமை வரை தங்கியிருந்து விட்டு எனது விஜயத்தை முடித்துக் கொண்டு கிளாலி படகுச் சேவைமூலம் கிளிநொச்சி மற்றும் மாவட்டங்களுக்கும் செல்வேன். அங்குள்ள மக்களின் குறை நிறைகளையும் கேட்டறிவேன்.

இங்கு நான் கண்டதையும் கேட்டதையும் எமது பாரிஸ் பத்திரிகை மூலம் உலகறியச் செய்ய வைப்பேன் என்றார். (யோ)


## எமது புதிய வெளியீடுகள்

1) கப்டன் 2) ஊழியன்
3) பெண்டாட்டியே தெய்வம்
4) சூரியா

**மாருதி வீடியோ விஷன்**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
குறிப்பு: மேலும் 09 படங்கள் தணிக்கையின் பின் வெளியாகும். (சி-8910)



## மலிவு விலையில் சகல பொருட்களும் பெற்றுக்கொள்ளவும்

ஆண், பெண் தையல் வேலைகளிற்கும் எவ்வகை அன்பளிப்புகளிற்கும் உகந்த அன்பளிப்பு மடல்களிற்கும்

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: அன்பளிப்பு மடல்களிற்கும் ரூபா 500/-க்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கும் இலவச பரிசு சீட்டைகள் வழங்கப்படும். பரிசுகள் 2500/-, 1500/-, 1000/-.
(இ-8888)



## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல் (ஐஸ் கிறீம் வாகனம் உட்பட) 25-03-1994 இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(7830) நிர்வாகம்


## “மொடியூல்ஸ்” விநியோகம்

தொலைக் கல்விக்கான “மொடியூல்களை” சம்பந்தப்பட்ட சிரேஷ்ட போதனாசிரியர்களுக்கு விநியோகிக்க யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கல்வி நிருவாகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மேற்படி மொடியூல்களை சம்பந்தப்பட்ட சிரேஷ்ட போதனாசிரியர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ப)


பாவாலே பாரெங்கும் பாடிடுவோம் அம்மானை
சாகா வரத்தவரே சாற்றிடுவோம் அம்மானை

# இன்று ஆரம்பமாகிறது

## திருமறைக் கலாமன்றம் வழங்கும்

3 நாட்கள் **“கல்வாரிக் கலம்பகம்”** 5 காட்சிகள்

(தவக்கால பக்தி, இசை, உரை நாடகம்)

25. 3. 94 - வெள்ளி - மாலை 6. 45 (ஒரு காட்சி)
26. 3. 94 - சனி - மாலை 6. 45, 9. 00 (இரு காட்சிகள்)
27. 3. 94 - ஞாயிறு - மாலை 6. 45, 9. 00 (இரு காட்சிகள்)

இடம்:- **மன்ற அரங்கு**

❋ முன்கூட்டியே ஆசனப்பதிவு செய்து கொள்ளவும்.
(சி-8907)

அன்பளிப்பு:
விஜிதா தேநீர்ச் சாலை - பிரதானவீதி
ஒளிஇல்லம் (அந்தியகாலசேவை) - பிரதானவீதி


## 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ். செயலக திருத்த வேலைக்கு இருபது லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு சென்று கேட்டுக் கொண்டதன் பேரில் இப்பணம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக செயலகக் கட்டடமும், பொருள்களும் சேதமடைந்தமை தெரிந்ததே. (தி) (கி)

## மலக்குழிகள் திருத்த பத்து இலட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)
நாவற்குழி, கெற்பெலி அகதி முகாம்களில் உள்ள மலக்குழிகளைத் திருத்தி அமைப்பதற்குப் பத்து இலட்சம் ரூபா அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மலக்குழிகள் சமீப காலமாக பழுதடைந்து உபயோகிக்க முடியாவண்ணம் காணப்படுகின்றன.

இதன்காரணமாகதொற்று நோய்கள் மற்றும் பல சிரமங்களை அகதி மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையை போக்கு முகமாக பத்து இலட்சம் ரூபாவில் இந்த மலக்குழிகளை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (தி. இ)

## பொ. ஐ. மு. முன்னணியில்

தென்மாகாணசபை தேர்தலில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் முடிவுகள்வெளிவந்துள்ளன. வெலிவந்த காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மூன்று மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னணியில் உள்ளது.


யாழ். **ஸ்ரீதர்** திரையில்

சனி, ஞாயிறு தினங்களில்
பி. ப. 2-00 மணி காட்சி மட்டும்
கேணல் கிட்டு உட்பட
10 வேங்கைகளின் 1-ம் ஆண்டு
நினைவு நிகழ்ச்சிகள் அடங்கிய
ஜனவரி ’94

# ஒளிவீச்சு

இத்துடன்
**அன்னை பூபதி 6ஆம் ஆண்டு**
நினைவாக
**“இது எங்கள் தேசம்”**
படமும் காண்பிக்கப்படும்
(இ-8913)



# மரண அறிவித்தல்

## மாணிக்கம் இலங்கைநாயகம்

(ஓய்வு பெற்ற புகையிரத திணைக்கள ஊழியர்)
மயிலிட்டி.

மாணிக்கம் இலங்கைநாயகம் நேற்றுக் காலமானார். அன்னார் இரத்தினசிகாமணிஅம்மாவின் அன்புக் கணவரும், குலதவநாயகம் (றஞ்சிதம்), புஷ்பலதா (பிரான்ஸ்), தேவராஜா (பிரான்ஸ்), குணநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசோதி (பிரான்ஸ்), புஷ்பராணி (பிரான்ஸ்), மேரி அலெக்சாண்டிரா (பேபி) ஆகியோரின் அன்புமாமனாரும், வாணா, கவிதா, குணேஸ்வரன், குணா, சந்துரு, விஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இன்று 25-03-94 புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் காலை 8-00 மணிக்கு தகனக் கிரியைகள் இடம் பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அறுபதுபாகைக்
கிணற்றடிவீதி,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

குலதவநாயகம் (றஞ்சிதம்)
(மகன்)

(7845)


இப்பத்திரிகை [illegible] வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள “[illegible]” பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.